# இத்தொகுப்பு - ஓர் அறிமுகம்

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்!

இச்சிறிய கைப்புத்தகம் வெளியிட உதவி செய்த இயேசு கிறிஸ்துவுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம்.

இச்சிறிய கைப்புத்தகத்தில், நாங்கள் படித்து சிந்தித்து விளங்கிக் கொண்ட வசன அடிப்படையிலான தற்கால நிகழ்வுகளை, நீங்களும் படித்து சிந்தித்து விளங்கிக் கொள்ள எண்ணி வெளியிட்டுள்ளோம். இது எங்கள் வெளியீட்டின் முதல் பாகம். இரண்டாம் பாகம் விரைவில் வெளிவருமென கர்த்தருக்குள் நம்புகிறோம். ஜெபிக்கிறோம். உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள். 21 வருஷங்களுக்கு முன்னதாகவே எழுதப்பட்டது, காத்திருந்தது, குறித்த காலத்தில் வெளிச்சத்திற்கு வந்தது. தேவனுக்கு நன்றி.

தாங்கள் பயன் பெற்று குறைந்தது பத்து பேருக்காவது வாசிக்க மின் அஞ்சல் செய்யுங்கள். உங்களது மேலான கருத்துச் சிந்தனைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*சகோதரி. லதா டேவிட் / சகோ. C. டேவிட்*


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு, (கிழக்கு)

தூத்துக்குடி-628 008

தொலைபேசி: 91-461-2377889

அலைபேசி: 0-9442466250 & 9003456506

Email : sovereignjesus@gmail.com

Website : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/533, CALDWELL COLONY, 2nd STREET, (East)**

**TUTICORIN-628 008**

**Ph. : 91-461-2377889**

**Mobile: 0-94424-66250 & 9003456506**

Email : sovereignjesus@gmail.com

Website : www.sovereignjesus.com

## ஆசிரியருரை...

முதல் கட்டமாக "தேவனே இல்லை" என்று வாதிடுபவர்களுக்கு "தேவன் ஒருவர் உண்டு" என்பதை புரிய வைக்கவே இந்த சிறு முயற்சி. அது மட்டும் போதாது "அந்த தேவன் யார்?" என்பதை புரிய வைக்கும் அடுத்த கட்ட முயற்சியும் இதில் அடங்குகிறது. பிதாவாகிய தேவன் (யெகோவா), அவருடைய வார்த்தையாம் குமாரன் (இயேசு), அவருடைய ஆவி (பரிசுத்தாவியானவர்) என்ற மூன்றில் ஒன்றான ஆள்தத்துவம் அடங்கிய திரியேக தேவனை அறிவிக்க முயற்சியெடுக்க தேவன் உதவி செய்தார்.

உண்மை தேவனான இயேசுவை அறிந்து, அவரை ஏற்றுக் கொண்டு, வளர்ந்து வருபவர்களின் விசுவாசம் இன்னும் உறுதிப்படவும் இதிலுள்ள விளக்கங்கள் கொஞ்சம் பிரயோஜனமாக இருக்கும். "தேவன் ஒருவர் உண்டு" என்று ஒத்துக் கொள்வது ஒரு பெரிய விஷயமே கிடையாது. பிசாசுகளுக்குக் கூட தேவன் ஒருவர் உண்டு என்று தெரியும், அவர் இயேசு மாத்திரமே என்று கூட அவைகளுக்குத் தெரியும்!

ஆனால் "தேவன் இல்லை" என்று நம்ப வைத்து, "இயேசு கிறிஸ்து ஒரு மகான் மாத்திரமே" என்று மக்களை தவறாக புரிந்து கொள்ள வைத்து, தன்னை விட மோசமான நிலைமைக்கு மனுக்குலத்தை தள்ளிவிட்டிருக்கும் பயங்கரத்தை யாரும் புரிந்து கொள்ளவில்லை. இதை வாசித்த பிறகாவது அந்த உணர்வு ஓரளவு உங்களுக்கு வரலாம்.

"வானம், பூமி, அண்டவெளி, அவற்றில் சுற்றியோடிக் கொண்டிருக்கும் கிரகங்கள், நட்சத்திரங்கள்" எல்லாம் தானாக உருவானது என்றும், பூமியும் அதன் நிறைவும் தன்னில் தானே தன்னை உருவாக்கிக் கொண்டன என்றும், ஒன்று இன்னொன்றாக உருமாறியது என்றும், மனிதன் குரங்கி-ருந்து வந்தான் என்றும், இப்படியாக, கதை கதையாக அளந்து, விஞ்ஞானமும் விஞ்ஞானிகளும் வெட்டி சாய்த்த, செத்த மரத்திற்கு உயிர் கொடுக்கும் முயற்சி, நொறுக்கி எறிந்த தேவபக்தியாம் கட்டிடத்தை திரும்பக் கட்டும் முயற்சி.

தங்களுடைய நம்பிக்கை நிஜமல்ல என்று தெரியாமல், கால்கள் தரையில் பாவாமல் நடந்து கொண்டிருக்கும் விஞ்ஞானிகள், மற்ற ஞானிகள், அறிவாளிகள், அதிமேதாவிகளின் எல்லைகளில் ஒரு சிறு அசைவை மட்டும் உண்டு பண்ணிப் பார்ப்பது எங்கள் நோக்கமல்ல, மரண அடி கொடுப்பதே எங்கள் வேலை! (அவர்கள் மேல் அல்ல! அவர்களுடைய நம்பிக்கையின் மேல் மட்டுமே)

உலகத்தை கலக்க நாங்கள் எடுத்திருக்கும் சிறு மணல் அளவான திட்டம்தான் இது. ஏற்கெனவே கலக்கி விட்டுப் போனவர்கள் ஆயிரமாயிரம்... இப்போதும் சில ஆயிரங்களால் கலக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது... இனிமேலும் கலக்க... இளைஞர் சமுதாயத்தில் இருந்து சில லட்சங்களை எழுப்புவோம்! அல்லேலூயா!

சுமார் 16 வருடங்களுக்கு முன் மரித்துப் போன ஊழியர் சகோ. ஜஸ்டின் பிரபாகரனின் புத்தகங்கள் தான் எனக்கு இந்த **inspiration** தந்தது. போதிய பாதுகாவல் அவருடைய எல்லைகளில் இல்லாமல் போனதால் தான்... அவருக்காக விசுவாசிகள் பலர் ஜெபிக்கத் தவறியதால்தான்... இந்த சோகம் அவருக்கு நடந்தது என்று நினைத்து நான் பலமுறை வருத்தப்பட்டதுண்டு. ஆனால் எது எப்படியோ, சாத்தான் அவருடைய ஊழியத்தை தொடர முடியாமல் தடை செய்ததற்கு கண்டிப்பாக ஒரு நோக்கம் உண்டு. அவனுடைய அந்த தீயநோக்கம் நிறைவேறக் கூடாது... அவன் ஜெயிக்கக் கூடாது என்பதும் என் பிரதான நோக்கம்.

இந்தப் புத்தகத்தை எழுதி 20 வருடங்கள் ஆகிறது! அதை வெளியிடமுடியாதபடி தடுத்து வைத்திருந்த சாத்தானின் அடுத்த நோக்கமும் இப்போது தவிடு பொடியாகிவிட்டது. அவரைப் போல பெரிதான அளவில் எதுவும் செய்ய முடியாவிட்டாலும், முடிந்த அளவுக்கு செய்து, ஆண்டவர் தந்த தரிசன சங்கி-யின் அடுத்த கொக்கியை, எழும்பி வரும் இளைய ஊழியக்காரனிடம் அல்லது ஊழியக்காரியிடம் கொடுத்து விடலாம் என்பதே என் நோக்கம். தேவன் உதவி செய்வாராக!

ஜஸ்டின் பிரபாகரனின் "இடி முழக்கம்", மற்றும் நான் வாசித்த பலதரப்பட்ட ஆவிக்குரிய புத்தகங்கள், மற்றும் செய்தித்தாள்கள் இன்னும் பல காரியங்களில் இருந்து என் ஆவியின், ஆத்துமாவின் உட்கூறுகளினால் இழுத்துக் கொண்ட சில காரியங்களைத் தொகுத்து இதில் தந்திருக்கிறேன். ஒரு சில தவறுகள் இருந்தால் மன்னித்து, திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து வரப்போகும் "வேதாகமமும், நிகழ்வுகளும்" பகுதி-2ம், "விதைகள்" பகுதி-2ம் விரைவில் வெளிவர ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவன் இந்த முயற்சியை எல்லாருக்கும் ஆசீர்வாதமாக்கித் தருவாராக! ஆமென்.

## 1) தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்திலே சொல்லிக் கொள்கிறான். – சங்கீதம் 14:1

தேவன் இல்லையென்பது விஞ்ஞான உலகத்தின் உயிர் முடிச்சு. கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்று எங்கும் எதிரொ-க்கும் வார்த்தைகளின் வாயை மூடவே இந்த முயற்சி. தேவன் இல்லை என்பதை நிரூபிக்க அரசியல் விஞ்ஞானத் துறைகளில் பெரிய அளவில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

உண்மையிலேயே கடவுள் இல்லையென்றால், அதை நிரூபிக்க இத்தனை ஹிமாலய முயற்சிகள் தேவையில்லை. இல்லாத ஒன்றை இல்லை என்று நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லை. கடவுள் இல்லை என்பதை நிரூபிக்க எடுக்கப்படும் முயற்சிகளே கடவுள் உண்டு என்பதற்கான ஆதாரங்களில் முக்கியமானதாகும்.

**"Laws of Cause and Effect"** என்ற விஞ்ஞான விதி என்ன கூறுகிறதென்றால், எல்லா விளைவுகளுக்கும் பின்னால் அதற்கான காரணம் ஒன்று உண்டு என்பதாகும்.

உலகில் பல விதமான கடிகாரங்கள் **(Quartz, Electronic)** உள்ளன. விஞ்ஞானிகள் வானவியல் கடிகாரத்தை உபயோகிக்கின்றனர். இந்த கடிகாரம் பூமி சுழல்வதைப் பொறுத்து செயல்படும். இவையெல்லாம் மனிதரால் உருவாக்கப்பட்டவை. எந்த கடிகாரமும் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளாது. உலக கடிகாரங்களை எல்லாம் நிர்வாகிக்கின்ற பூமி என்ற பெரிய கடிகாரம் மட்டும் எப்படி தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ள முடியும்? **As the earth is an effect there should have seen a "cause" that made it".**

**Effect cannot be greater than the cause** மனிதன் கம்ப்யூட்டர்களையும் ராக்கெட்டுகளையும் கண்டுபிடித்தாலும் தன்னை விட பெரிதான எதையும் அவன் கண்டுபிடித்துவிடவில்லை. படைப்புகளில் உயர்ந்தவன் மனிதன். மனிதனுக்கு எப்படி உயிரும் ஆள்தத்துவமும், உணர்ச்சிகளும் உள்ளதோ அது போலவே அவனை உருவாக்கிய சக்தியும் மனிதனை விட உயர்ந்ததாக, உயிர் உணர்ச்சி ஆள்தத்துவம் உள்ளதாகத்தான் இருக்க வேண்டும். அந்த சக்தியே எல்லாவற்றிற்கும் மூல காரணர். **He is the principal cause for all the effect.**

24 மணி நேரத்திற்கு ஒரு முறை தன்னை சுற்றும் உலகம், இரவு பகல், பருவகாலங்கள், குறிப்பிட்ட பாதையில் ஓடும் கிரகங்கள் எல்லாம் ஒரு திட்டத்தைக் காட்டுகின்றன. திட்டம் ஒன்று உண்டென்றால் அதை திட்டமிடுபவரும் நிச்சயம் இருக்க வேண்டும். **If there is a design there has to be a designer.** தச்சன் இல்லாமல் மரம் தானாக நாற்கா-யாக உருவெடுப்பதிலை.

எந்த பொருளும் பூமியை நோக்கித்தான் விழுகின்றன. வானை நோக்கி செல்வதில்லை. இது இயற்கையில் நாம் காணும் சட்டம். அப்படியானால் சட்டத்தை உருவாக்கியவரும் இருக்கத்தான் வேண்டும். **If there is a law there has to be a Law giver.**

தேவன் இல்லையென்பவன் நாஸ்திகன். ஆனால் இவன் அதிகமாக சிந்திப்பது தெய்வத்தைப் பற்றித்தான். இல்லாத ஒன்றை பற்றி ஏன் எப்போதும் நினைக்க வேண்டும்? இதுவும் தேவன் இருக்கிறார் என்பதற்கான அடுத்த ஆதாரமாகும்.

தொடக்கம் இல்லாமல் எதுவும் உருவாக முடியாது. பல மில்லியன் வருடங்களுக்கு முன் சுழன்றுக் கொண்டிருந்த வாயுக் கோளத்தில் இருந்து தான் எல்லா கிரகங்களும் வந்தது என்ற விஞ்ஞான உளரலை கணக்கிலெடுத்துக் கொண்டாலும், அந்த வாயுக்கோளம் எப்படி, எங்கிருந்து வந்தது? தொடக்கம் இல்லாமல் எவ்விதம் உருவாக முடியும்? சிந்தனையின் முடிவில் மனிதன் அறிவுப்பூர்வமான அதிர்ச்சி அடைகிறான்.(ரோமர் 1:20) தேவன் உலகத்தை உருவாக்கினார் என்பதை சோதனைச் சாலையில் நிரூபிக்க முடியாது என்பதால் குழப்பத்தின் எல்லைக்கு சென்று Darwin Theory போன்ற கொள்கைகளை ஏற்படுத்துகிறான். தேவன் உண்டு என்ற உண்மையை மறைக்கும் முயற்சியே டார்வின் தியரியாகும். கடவுளை நம்புபவன் முட்டாள் என்பதான நம்பிக்கையில் விஞ்ஞான உலகம் சென்று கொண்டிருப்பதால்; தேவன் இந்த உலகை சிருஷ்டித்தார் என்ற உண்மையை மனிதனால் ஜீரணிக்க முடியவில்லை. தேவன் உண்டென்ற உண்மையை வெளியே சொன்னால் அது, பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு பேரிடியாக இருக்கும்.

குரங்கி-ருந்துதான் மனிதன் பரிணாம மாற்றமடைந்து வந்தான் என்று எழுதப்பட்டிருக்கும் கல்வியியல் சம்பந்தப்பட்ட அத்தனை புத்தகத்தையும் மாற்றி எழுத வேண்டியதாயிருக்கும். அதனால்தான் இந்த குழப்பமெல்லாம்.

**2. a) தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.**
**– ஆதியாகமம் 2:7**

உலகமெங்குமுள்ள மனிதர்கள் ஏதாவது ஒரு மண்ணின் நிறத்தில்தான் இருக்கின்றனர். (பிரௌன்) (Brown)

மனித சரீரத்தின் முக்கிய மூலகங்களான நைட்ரஜன், கார்பன், ஆக்சிஜன், கால்சியம், தண்ணீர் போன்றவை மண்ணிலும் இருக்கிறது என்பதை விஞ்ஞான உலகம் கண்டுபிடித்த உண்மை. பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் வார்த்தைகள் கட்டுக்கதைகள் அல்ல.

**b) பூமியானது மிருகங்களையும்... ஊரும் பிராணிகளையும்... பிறப்பிக்கக்கடவது என்றார். (ஆதி. 1:24)**

பூமியின் மண்ணிலுள்ள அதே மூலகங்கள்தான் மிருகங்களின், ஊர்வனவற்றின் சரீரத்தில் இருப்பதாக விஞ்ஞானமும் ஒத்துக் கொள்கிறது.

**3. காற்று தெற்கே போய் வடக்கேயும் சுற்றி சுழன்று அடித்து தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும். பிரசங்கி 1:6**

பருவக் காற்றுகள்தான் மழையைக் கொண்டு வருகின்றன. வேதம் சொல்லும் இம்முறையையே உலகப் பருவக் காற்றுகள் இன்றும் பின்பற்றுகின்றன.

**4. வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததுபோல ... என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் வர்த்திக்கப் பண்ணுவேன் என்று... எரேமியா 33:22**

1930 ஆண்டுவரை சுமார் 100 மில்லியன் நட்சத்திரங்கள் தான் வானத்தில் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்பினர். பிறகு 40 **Sextillion** நட்சத்திரங்கள் இருப்பதாக கணக்கிட்டனர் (40க்கு பக்கத்தில் 22 பூஜ்ஜியங்கள் போட வேண்டும்.) பிறகு நட்சத்திரங்களை கணக்கிடவே முடியாது என்று முடிவாக அறிவித்து விட்டனர். வேத வார்த்தைகள் நிரூபிக்கப்பட்டாகி விட்டது.

**5. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். –ஆதி. 1:27**

**"Second Law of Thermodynamics"** என்பது ஒரு விஞ்ஞான விதி. இந்த விதிப்படி ஒரு குறிப்பிட்ட அளவுள்ள சக்தி மற்றொரு சக்தியாக மாற்றப்படும்போது மொத்த சக்தியில் ஒரு பகுதி வீணாய் செலவழிந்து போகும்.

அதாவது உலகில் இந்த சக்தி மாற்றம் தொடர்ந்து நடைபெறுவதால் உலகம் கீழான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது. (பூமியின் சுழற்சி வேகம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது).

ஆனால் டார்வினுடைய கொள்கைப்படி சிறிய உயிரினங்களில் இருந்து படிப்படியாக மேலான உயிரினங்கள் வந்தன என்கிறது. குரங்கில் இருந்து மனிதன் வந்தான் என்று கூறுகிறது. இதில் முரண்பாடு தெரிகிறது.

டார்வின் இப்படிக் கூறி 100 ஆண்டுகளுக்கு மேலாகியும் மனிதனையும் குரங்கையும் இணைத்து இணைப்பு உயிரினம் எதையும் மனிதன் கண்டு பிடிக்கவில்லை. **Missing link is still missing** குரங்குக்கு இருக்கும் அகன்ற தாடையும், விரிந்த மூக்கும், குட்டை கழுத்தும், கால்களுக்கு கீழ் வரை தொங்கும் நீண்ட கைகளும், வாலும் மனிதனுக்கு சம்பந்தமில்லைதவை. வேதத்தின் செய்தியான, தேவன் மனிதனை நேரிடையாக

உருவாக்கினார் என்பதே சரி.

## 6. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஆதி. 1:1

தேவன் பூமி, சந்திரன், சூரியன் நட்சத்திரங்களை உருவாக்கி சுமார் 10,000 வருடங்கள்தான் ஆகியுள்ளது என்பது கிறிஸ்தவ வேதாகமத்தின் அடிப்படை உண்மை. (ஆதி.1:1 முதல் வெளி. கடைசி வரை துல்-யமாக கணக்கெடுத்தால் சுமார் 6,500 வருடங்கள் தான் ஆகிறது.)

ஆனால் விஞ்ஞானம் இவைகள் உருவாகி பல மில்லியன் வருடங்கள் ஆகியிருப்பதாக கூறி வருகிறது.

**A)** **30 Tons / Sec.** என்ற வேகத்தில் எரிந்து கொண்டிருக்கும் ஹாலி நட்சத்திரத்தின் வால் அது உருவாகி பல மில்லியன் வருடங்கள் ஆகியிருந்தால் எரிந்து முடிந்திருக்கும்.

**B)** ஒரு வருடத்திற்கு சுமார் 14.2 மில்லியன் டன் எடையுள்ள விண்துகள்கள் பூமியில் விழுந்து, மழையால் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டு அங்கு நிக்கலாக மாறுகிறது. உலகம் உருவாகி சுமார் 5000 மில்லியன் வருடம் ஆகியிருக்கும் என்று வைத்துக் கொண்டாலும் சுமார் 54 அடி உயரத்துக்கு விண்துகள்களின் சாம்பல் இருக்க வேண்டும். கடலில் உள்ள நிக்கலின் அளவை கணக்கிட்டால் சுமார் 8000 ஆண்டுகளாகத்தான் இத்துகள்கள் பூமியில் விழுகிறது என்பது தெரிகிறது. சந்திரனில் அரை அங்குலம் உயரம் மட்டுமே இத்துகள்கள் உள்ளதாக கணக்கெடுத்துள்ளனர்.

**C)** ஒரு குடும்பத்துக்கு 2 குழந்தைகள் வீதம் அவர்கள் ஆயுசு காலம் 43 வருடம் என்று வைத்துக் கணக்கிட்டால் இன்றைய உலகின் ஜனத்தொகையான 6,080,141,683 **(Source: World Population data from Encyclopedia on 1-6-2000)** மக்கள் வர 4000 வருடங்கள் ஆகும். தற்போதைய மக்கள் தொகை 6.5 பில்லியன் **(Source: World Population data from Encyclopedia on Dec. 2006)** டார்வின் கொள்கைப்படி மனித இனம் உருவாகி 1 மில்லியன் வருடம் என்று வைத்துக் கொண்டாலும் இன்றைய ஜனத்தொகை **Approx.** $10^{2700}$ ஆக இருக்கும். அதாவது 10க்கு பக்கத்தில் 2700 பூஜ்ஜியங்கள் போட வேண்டும்! அவ்வளவு மக்களுக்கு பூமியில் இடமில்லை. (கவனிக்கவும், இது 20 வருஷங்களுக்கு முந்தைய கண்க்கீடு!)

**D)** இவைகளெல்லாம் (பூமி, சந்திரன்) பல மில்லியன் வருடங்கள் ஆகியுள்ளது என்பதை நிரூபிக்க தேவையான சரியான விஞ்ஞான உபகரணங்களும் இல்லை.

**வேதமே சரி!!**

## 7. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி...

– ஆதி 2:22

தேவன் முதல் மனுஷனை உருவாக்கி, அவனி-ருந்தே மனுஷியையும் உருவாக்குகிறார்.

ஆனால் விஞ்ஞான உலகம் 'சில ரசாயனப் பொருட்கள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக தற்செயலாக ஒன்று சேர்ந்ததினால் உலகமும், உயிரினமும் உருவாகியிருக்கும். அப்படியே மனிதனும், மனுஷியும் உருவானார்கள்' என்று நம்புகிறது. இவர்கள் தேவன் இல்லையென்கிற நாத்திக கொள்கையையுடையவர்கள்.

உயிரின் அடிப்படையான புரோட்டீன் மூலக்கூறு தற்செயலாக உருவாக மட்டும் சுமார் $10^{234}$ மில்லியன் வருடங்கள் (10க்கு பிறகு 234 ஜீரோ) ஆகியிருக்கும் என்று **Du-Novy** என்ற விஞ்ஞானி தெரிவிக்கிறார். ஆனால் உலகம் உருவாகியோ சுமார் 6000 முதல் 10,000 வருஷங்கள்தான் ஆகிறது. எனவே தற்செயலாக உலகமும் உயிரினங்களும் உருவாகியிருக்க முடியாது.

**8. தேவன் பகலை ஆள, பெரிய சுடரும் (சூரியன்) இரவை ஆள, சிறிய சுடரும் (சந்திரன்) ஆகிய... நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்...**

**–ஆதியாகமம் 1: 16,17**

நாம் வசிக்கும் பூமியும் மற்றக் கிரகங்களும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருந்த ஒரு வாயுக் கோளத்தில் இருந்துதான் பிரிந்து வந்தன என்று விஞ்ஞான உலகம் நம்பி இருந்தது. இது **"Nebular Theory"** ஆகும் .

சுழலும் வாயுக் கோளத்தில் இருந்து பூமியும், கிரகங்களும் வந்திருக்குமானால் அந்த வாயுக் கோளம் சுழன்ற திசையில்தான் எல்லா கிரகங்களும் சுற்ற வேண்டும். மேலும் எல்லா கிரகங்களும் ஒரே திசையில்தான் சுற்ற வேண்டும். இதை கணிதத்துறை வல்லுனர்கள் **"Law of Conservation of angular momentum"** என்று அழைக்கின்றனர்.

ஆனால்...

அ) மெர்க்குரி கிரகமும், வீனஸ் கிரகமும் பூமியைப் போல தங்களைத் தங்களே சுற்றிக் கொள்வதில்லை.

ஆ) வீனஸ் கிரகம் மட்டும் மற்ற கிரகங்களுக்கு எதிர் பக்கத்தில் சுற்றுகிறது.

இ) யுரேனஸ் 98 டிகிரி சாய்வில் சுற்றுகிறது.

ஈ) பூமி 231/2 டிகிரி சாய்வில் சுற்றுகிறது.

உ) இந்த அமைப்பில் உள்ள 32சந்திரன்களில் 11 சந்திரன்கள் எதிர்புறமாக சுற்றுகின்றன.

ஊ) எல்லா கிரகங்களும் வெவ்வேறு தன்மை பொருந்தியவை. பூமி மிகச் சிறப்பானது. இதில் 100க்கு மேற்பட்ட மூலகங்கள் உண்டு.

எ) ஒவ்வொரு கிரகமும் தன்னைத் தானே சுற்ற எடுத்துக் கொள்ளும் கால அவகாசங்களும் வெவ்வேறு. உ.ம். வியாழன் கிரகம் பூமியை விட 11 மடங்கு பெரியதாக இருந்தாலும் இது 10 மணிக்கொருமுறை தன்னைத் தானே சுற்றி விடுகிறது.

Nebular Theory யும் தவறு என்பது நிரூபணமாகிவிட்டது.

**9) தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் மனதுக்கு... –ஆதி. 6:6**

இந்த வசனமும் தேவன்தான் மனிதனை உருவாக்கினார் என்பதற்கான மற்றொரு சான்று.

அ) உயிரின் அடிப்படை மூலக்கூறு **DNA** (அமினோ ஆசிட்)-ஐத் தேவையான விகிதத்தில் சோதனைக் குழாயில் போட்டு உயிர்த் தன்மையுள்ள பொருளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். **DNA**விற்கான விகிதத்தை அவர்கள் இன்னொரு மூலக்கூறு **DNA**-ல் இருந்து தெரிந்து கொண்டனர். அந்த இன்னொரு **DNA**-க்கு சூத்திரத்தை வகுத்தவர் யார்? விஞ்ஞானம் பதில் சொல்லாது

. சோதனைச் சாலையில் உருவாக்கப்பட்ட **DNA**-க்கு எப்படி அதைவிட பெரிய விஞ்ஞானி தேவைப் படுகிறாரோ, அதுபோலவே உலகின் உயிரினங்களை உருவாக்க அவை எல்லாவற்றையும் விட பெரிய விஞ்ஞானியான ஆண்டவர் தேவை. அவர் இருக்கிறார் என்பதையும் இக்கண்டுபிடிப்பு தெரிவிக்கிறது.

ஆ) குரங்கு மனிதனாக மாற பல லட்சக்கணக்கான வருடங்கள் ஆகியிருக்கும் என்பதால் அதை கண்களால் காண முடியாது என்கிறார் விஞ்ஞானி டார்வின். விஞ்ஞானம் என்றால் அது கண்களால் காணக்கூடியதும், சோதனைச் சாலையில் நிரூபிக்கக்கூடியதாவும் இருக்க வேண்டும். அதனால் இக்கருத்து ஒரு கொள்கைதானேயன்றி விஞ்ஞான

உண்மையல்ல.

இ) Dianosaurus போன்ற ராட்சத மிருகங்கள்தான் மனிதனின் முன்னோடி என்பது இவர் கருத்து. இல்லினாய்ஸ், கெண்டகி, மிசௌரி, டெக்ஸாஸ் ஆகிய இடங்களில் இந்த மிருகத்தின் காலடிச் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டபோது அதனுடன் மனிதனின் காலடிச் சுவடுகளும் காணப்பட்டன. ராட்சத மிருகங்களும், மனிதனும் ஒரே சமயத்தில் தேவனால் உருவாக்கப்பட்டு பூமியில் வாழ்ந்திருக்கின்றனர் என்பதை இது காட்டுகிறது.

## 10. வானங்கள் கர்த்தருடையவைகள், பூமியையோ மனுபுத்திரனுக்குக் கொடுத்தார். –சங். 115:16

அ) பூமியில் இருந்து 1/4 மில்லியன் மைல் தொலைவில் இருக்கும் சந்திரனில் துளிகூட தண்ணீர் இல்லாததால் அது மனித குடியிருப்புக்கு லாயக்கு இல்லாத இடம் என்று 'அப்பெல்லோ 17' முயற்சிகள் நிறுத்தப்பட்டன.

ஆ) மார்ஸ் கிரகத்தில் 30 டிகிரி சென்டிகிரேட் குளிர்ந்த நிலையில் மனிதன் குடியேறுவது சாத்தியமற்றது.

இ) வீனஸ் கிரகத்தின் உஷ்ண நிலை 900 டிகிரி ஃபாரன்ஹீட் ஆகும். முதலில் அனுப்பப்பட்ட கலங்கள் உஷ்ணத்தால் எரிந்து விட்டன. கந்தகம் நிறைந்த அங்கு மனிதன் எப்படி குடியேறுவது?

ஈ) சந்திரனிலும் மற்ற கிரகங்களிலும் உயிரினங்கள் இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு அவர்களுக்கான சில தகவல்களை வான்வெளி கலங்கள் எடுத்துச் சென்றன. ஆனால் இதுவரை அதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. செவ்வாய் கிரகவாசிகள், வேற்றுகிரக மனிதன் போன்ற விசித்திர உருவங்கள் கதைகளிலும், பறக்கும் தட்டு போன்ற ஆதாரமில்லாத செய்திகளும் தான் சாத்தியமாயிற்று, கட்டு கதைகள்தான் மிச்சமானது.

பூமியைத் தவிர மற்றைய கிரகங்கள், சந்திரன்கள், நட்சத்திரங்கள் எல்லாவற்றிலும் தேவனைத் தவிர மற்றைய உயிரினங்கள் வாழ முடியாது. ஏனென்றால் அவைகள் கர்த்தருடையவை. **Readers Digest** என்ற உலகப்புகழ் வாய்ந்த பத்திரிக்கை என்ன கூறுகிறதென்றால், உலக வல்லரசு நாடுகள், வானவெளி ஆராய்ச்சியில் தோல்வியடைந்து விட்டன. தோல்வியை ஒப்புக் கொள்ள முடியாததால் பெயரளவில் சில Shuttle மாத்திரம் செய்திக்காக அனுப்புகின்றன. வான வெளி கலங்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டன.

இந்த 2006வது வருஷத்திலும் செவ்வாய் கிரகத்துக்கு வரும் ஆண்டில் சக்தி வாய்ந்த இயந்திரத்தை அனுப்பப் போவதாக பேசிக் கொண்டுதான் இருக்கிறது. வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

## 11. மனுபுத்திரர் தாங்கள் மிருகங்கள் போல் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் காணும்படிக்கு தேவன் அவர்களை சோதிக்கிறார் என்று... பிரசங்கி 3.18

"Ontogeny recapitulates phylogeny" என்பது பரிணாமக் கொள்கையின் ஒரு கருத்து. இதன்படி ஒரு உயிர் கருவில் வளரும் போது தான் எந்த உயிரில் இருந்து பரிணாமப்படி உறுமாறி வந்ததோ அந்த உயிரின் சாயலை ஒத்திருக்கும் என்பதே.

மீன், தவளையாகி, ஊர்வனவாகி, பறப்பனவாகி, குட்டிப்போட்டு, மிருகமாகி, குரங்காகி மனிதனானான் என்பது இக்கொள்கையின் வாதம். மனிதர் கருவில் வளரும் போது அவனுக்கு மீனின் செவிள்கள் (Gills) போன்ற உறுப்பு இருப்பதைக் காட்டினர். ஆனால் மனித செவிள்களுக்கும், மீனின் செவிள்களுக்கும் உள்ள திசுக்களில் ஒற்றுமையில்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. மீனின் செவிள்கள் பிராண வாயுவை மீனுக்கு அளிக்கின்றன. மனித செவிள்களில் இருந்து தாடை, காது, நாக்கு போன்றவை உருவாகுகின்றன. செயலும் வெவ்வேறு.

குரங்கின் கரு வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் அது மனிதக் குழந்தையைப் போல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கொள்கைப்படிப் பார்த்தால் மனிதனிலிருந்து குரங்கு வந்தது என்றல்லவா ஆகிறது?

உயிரினங்களில் உள்ள ஒற்றுமைக்கு காரணம் அதை உருவாக்கிய சிற்பி (தேவன்)

ஒருவரே என்பதால்தான். அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாததால்தான் இந்த குழப்பமெல்லாம்.

மனிதன் மிருகங்களுக்கும் தனக்கும் உள்ள உடல் ஒற்றுமையை பார்த்து குழம்பி உண்மையை கண்டறியத்தக்கதாக அவர்களை சோதிக்கவே தேவன் அவ்வாறு செய்தார் என்று வசனம் சொல்லுகிறது.

## 12. அவர் (தேவன்) பூமி உ(ரு)ண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்... –ஏசாயா 40:22

ஆதியிலே மக்கள் பூமியின் உருவத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை. பூமி தட்டையான விரிந்த பரப்புடையது என்றும், ஏதாவது ஒரு இடத்தில் அதற்கு முடிவு உண்டு என்றும், அதன் எல்லையைத் தாண்டினால் பாதாளத்தில் விழ வேண்டியிருக்கும் என்றும் நம்பி வந்தனர். அதனால் அதிக தூரம் பிரயாணம் செய்யாமல் இருந்தனர்.

மேலும் பூமி உருவமில்லாதது, முக்கோண வடிவமானது, செவ்வகமானது, சதுரமானது என்றெல்லாம் அனுமானங்கள் நீண்டுக் கொண்டே போய், முடிவில் கப்பலின் பாய்மரத்தைக் கவனித்து பூமி உருண்டைதான் என்று கண்டுபிடிப்பதற்குள் விடிந்ந்ந்து விட்டது!

பூமி உருண்டை என்று கண்டு பிடித்த கலிலேயோ என்ற இத்தாலி நாட்டு விஞ்ஞானி கி.மு. 1564-1461ல் வாழ்ந்தவர்தான். சுமார் 5000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக வேதத்தில் தேவன் இரண்டே வார்த்தையில் இவ்வுண்மையை சொல்லியிருக்கிறார்.

## 13. அப்போது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் (மனிதன் உட்பட) பார்த்தார்... அது மிகவும் நன்றாயிருந்தது... –ஆதியாகமம் 1:3

அப்பெண்டிக்ஸ், தைராயிடு, டான்சில்ஸ், தைமல், காக்சிக்ஸ், போன்ற மனித உடலின் உறுப்புக்கள் எந்த வேலையும் அற்றவையாக இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் நம்பினர். இவற்றை Vestigial Organs என்பர்.

பரிணாமக் கொள்கைப்படி இந்த உறுப்புக்களெல்லாம் எந்த உயிரினத்தில் இருந்து மனிதன் உருமாறி வந்தானோ அந்த உயிரினத்தைச் சேர்ந்தது என்றும், அந்த உயிரினங்களில் அவை இருக்கும் போது செயல்பட்டது என்றும், மனிதனாக அந்த உயிரினங்கள் உருமாறிய பிறகு அவை வேலையற்று இருக்கின்றன என்றும் கூறினர்.

உதாரணமாய் Coccys என்ற முதுகெலும்பின் கடைசி வால் போன்ற பகுதி மனிதன் குரங்காய் இருந்தபோது பிரயோஜனப் பட்டது என்றும், குரங்கு மனிதனான பிறகு அது அப்படியே இருக்கிறது என்றும் கூறினர்.

ஆனால் இந்த Coccys மனிதன் நிமிர்ந்து நேராய் நிற்பதற்கு பயன்படுகிறது என்று பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள பெரிய வித்தியாசமே அதுதான். சுமார் 180 உறுப்புக்கள் இவ்வாறு பயனற்றவை என்று கூறி வந்த மருத்துவத்துறை, இப்போது எல்லா உறுப்புக்களுமே பயனுள்ளவை என்று தெரிவித்துள்ளது.

அப்பெண்டிக்ஸ் - நோய் வராமல் பாதுகாக்கவும்,

தைராய்டு - தைராக்சின் என்ற அவசியமான நீரை சுரக்கவும்,

டான்சில்ஸ் - நோய்க் கிருமிகள் உள்ளே செல்லாமல் தடுக்கவும்,

தைமல் - நோய் கிருமிகளை அழிக்கும் பொருளை உருவாக்கவும் பயன்படுகிறது.

Vestigial Organs பயனுள்ளவை என்ற இந்த நிரூபிப்பு பரிணாமக் கொள்கைக்கு பேரிடியாகும்.

**14. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ... தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. –ஆதியாகமம் 1: 1,2,3**

முதல் வசனத்தின்படி உலகம் **Time, space, matter** மூன்றையும் உள் அடக்கியது.

ஆதியிலே - காலம் - "Time"...

வானத்தை - வெளி - "Space"...

பூமியை - வஸ்து - "Matter" ஆகும்

காலம் சென்ற Herbert Spencer என்ற விஞ்ஞானி **"Time, Space, Matter, Force, Motion** என்ற 5 காரியங்களால் உலகம் உண்டானது என்கிறார். (இவர் கிறிஸ்தவர் அல்ல)

2ஆம் வசனத்தில்...

ஆவியானவர் - **"Force"** - உந்துவிசை

அசைவாடினார் - "Motion" -இயக்கம் - என்பதைக் குறிக்கிறது.

உலகில் 3 விதமான அடிப்படை சக்திகள் கிரியை செய்கின்றன.

அ. அணுசக்தி (Nuclear Forces)

ஆ) ஈர்ப்பு சக்தி (Gravitational Forces)

இ) மின்காந்த சக்தி (Electro-Magnetic forces)

தண்ணீரின் மேல் அலைகள்தான் உருவாகும். ஆவியானவர் தண்ணீரின் மேல் அசைவாடி உராய்வு ஏற்படுத்தி உருவாக்கிய சக்திகள் அலைவடிவத்தில் தான் இருந்திருக்க வேண்டும். இப்போதும் இந்த மூன்றுவிதமான சக்திகளும் அலைவடிவில் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆதியிலே - வானத்தை - பூமியை தேவன் (பிதா) உருவாக்கும் போது Nuclear forces கிரியை செய்ய ஆரம்பிக்கிறது.

ஆவியானவர் (பரிசுத்த ஆவி) அசைவாடும்போது Gravitational forces-ம்,

வார்த்தையினால் (இயேசு) ஒளி உண்டான போது Electro Magnetic forces செயல்பட ஆரம்பிக்கின்றன.

விஞ்ஞானம், எப்படி? என்ற கேள்விக்கு மட்டும் தான் பதில் சொல்லும், கிறிஸ்தவர்களின் வேதமான **The Bible** ஏன்? என்ற கேள்விக்கும் பதில் சொல்லும்.

**15. கர்த்தாவே! நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், ... அவைகள் அழிந்து போம்... அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழைமையாய்ப் போம். – எபிரேயர் 1:10,11**

"Laws of Thermodynamics" என்ற விஞ்ஞானத்தில் சக்தியை குறித்து 2 அடிப்படை விதிகள் உள்ளன.

இதில் முதல் விதி உலகில் சக்தி உருவாக்கப்படுவதுமில்லை, அழிக்கப்படுவதுமில்லை என்று தெரிவிக்கிறது. ஆதியில் உருவாக்கப்பட்ட சக்திதான் வெவ்வேறு சக்தியாக உருமாறுகிறதே அன்றி புதிய சக்தி தோன்றுவது இல்லை. அப்படியானால் முதல் முதலாக உலகில் சக்தி எப்படி உருவானது? விஞ்ஞானம் நெற்றியைச் சுருக்குகிறது.

ஆனால் கிறிஸ்தவர்களின் வேதாகமம் தெரிவிக்கிறது. ஆதி. 1:2-ன் படி தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாட, அசைவாட, உராய்வு ஏற்பட்டு வெப்பசக்தி உண்டாயிற்று, பிறகு உராய்வு அதிகம் ஆக ஆக ஒலி சக்தியும், ஒளிசக்தியும் தொடர்ந்து உருவாக, எல்லாம் சேர்ந்து பொருளாக மாற்றப்பட்டன. **Energy was converted into**

matter.

இரண்டாவது விதிப்படி ("The Second Law of Thermodynamics") ஒரு சக்தி மற்றொரு சக்தியாக மாற்றப்படும்போது மொத்த சக்தியில் ஒரு பகுதி வீணாய் செலவழிந்து போகும் என்பதே. வசனத்தின்படி சக்தி உருவாக்கப்படாததாலும், வீணாய் செலவழிவதாலும் உலகம் மேலான நிலையில் இருந்து கீழான நிலைக்கு சென்றுக் கொண்டிருக்கிறது. **The world is running out.** உலகம் அழிந்து கொண்டே இருக்கிறது. பழையதாகிக் கொண்டே இருக்கிறது. முடிவு? (ஏசா.42:9, 65:17, 66:22, 2பேதுரு.3:13, வெளி.21:1)

**16. நீ கழுகைப் போல உயரப் போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்தில் இருந்து விழத்தள்ளுவேன்.**
**– ஒபதியா 1:4**

அ) கடந்த 1979ம் வருடம் "Sky-Lab" பூமியை நோக்கி வீழ்ந்த போது உலகம் முழுவதும் பெரிய தத்தளிப்பிற்குள்ளானது.

ஆ) 1978ல் "Cosmos 954" பூமியின் மேல் விழுந்த போது அதன் உடைந்து விழுந்த பாகங்களை அகற்றி அது விழுந்த இடத்தை சுத்தம் செய்ய 3 மாதங்கள் ஆயிற்றாம். 6 மில்லியன் டாலர் செலவாயிற்றாம்.

இ) 1983ல் "Cosmos 1402" இந்து மகா சமுத்திரத்தில் விழுந்தது. அதின் கதிரியக்க விளைவுகள் உலகில் ஏற்படும் என அஞ்சப்பட்டது.

ஈ) சந்திரனில் மனிதன் இறங்கினாலும் குடியேற முடியால் திரும்பி விட்டான்.

உ) மற்றைய கிரகங்களுக்கு அனுப்பப்பட்ட விண்வெளி கலங்கள் எரிந்து, பழுதடைந்து, அல்லது முழுமையான வெற்றியடையாமல், எதிர்பார்த்ததை செய்யாமல் திரும்பிவிட்டன, (இன்றளவும் திரும்பிக் கொண்டிருக்கின்றன, இனிமேலும் திரும்பும்.) அழிந்துவிட்டன.

சந்திரனுக்கு கீழே மனிதன் குடியேற செயற்கை உலகத்தை வடிவமைக்க எடுக்கப் பட்ட ஆலோசனைகள் வெறும் பேச்சுடன் நிறுத்தப்பட்டது.

மனிதன் குடியிருக்க தேவன் தந்தது பூமியை மட்டும்தான். இன்னும் சில நூற்றாண்டுகளில் பூமியில் மனிதன் நிற்கக்கூட இடம் இருக்காது என்ற பயம்தான் மனிதனின் இம்முயற்சிகளுக்கு காரணம். ஆனால் தேவன் அதற்கு அனுமதிக்கவில்லை.

சுனிதா ...

**17. சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. – 1 கொரிந்தியர் 15:41**

தொலை நோக்கி உதவியில்லாமல் வெறும் கண்களால் சுமார் 1500 நட்சத்திரங்களைதான் பார்க்க முடியும்.

ஆரம்பத்தில் நட்சத்திரங்கள் எல்லாம் சூரியனைப் போன்றவை என்றும், சூரியன் அருகில் இருக்கும் நட்சத்திரம் என்றும் அறிவித்தனர். ஆனால் சூரியனை மகத்தான சுடர் என்று அழைக்கும் வேதம் நட்சத்திரங்களுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கவில்லை. **He (God) made the stars also** என்றுதான் குறிப்பிடுகிறது.

சில நட்சத்திரங்கள் நம் பூமியைவிட பெரியதாகவும், சந்திரனை விட சிறியதாகவும் இருக்கின்றன. (உம். **Red Jaint** என்ற நட்சத்திரம் சூரியனை விட 500 மடங்கு பெரியது!) நம் கண்களுக்கு புலப்படுமளவுக்கு சமீபத்தில் இருக்கும் **"Alpha Centuri"** என்ற நட்சத்திரத்திற்கு ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் 4 1/2 ஆண்டுகளில் சென்றடையலாம்.(நம் சூரியனை 1 1/2 நிமிடங்களில் அடையலாம்) தொலை நோக்கியில் பார்க்கக் கூடிய நட்சத்திரக் கூட்டங்கள் 6,500 மில்-யன் ஒளியின் ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது. **"Orion Belt"** ல் அமைந்துள்ள **"Betelgeuse"** என்ற நட்சத்திரத்தின் விட்டம் 500 மில்-யன் கி.மீ! இந்த நட்சத்திரத்தின் உட்பகுதி வெறும் கூடாக இருக்குமானால், பூமி

அதனுள்ளேயே சூரியனை தன் வழக்கமான ஓட்டப்பாதையில் சுற்றி வர முடியும்!(பூமியின் சுற்று வட்ட பாதையின் விட்டத்தின் அளவு 300 மில்-யன் கி.மீ.) சந்திரனை விட சிறியதாகவும் இருக்கின்றன. சூரிய, சந்திர, பூமியின் திட்டமான, ஒழுங்கான அமைப்புக்கள் நட்சத்திரங்களில் கிடையாது. நட்சத்திரங்கள் பெரும்பாலும் ஹைட்ரஜன், ஹீலியம் இவற்றால்தான் உருவானவை. தூரப் பார்வைக்கு மஞ்சளாகத் தோன்றினாலும் பெரும்பாலும் சிவப்பு, பச்சை, நீலம் என்று பல வண்ணங்களில் இருக்கிறது. கோடிக்கணக்காயினும் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மை கொண்டவைதான் என்று கண்டறிந்துள்ளனர்.

எந்த ஆராய்ச்சியும் இல்லாமலேயே பவுல் வேதத்தில் எழுதியிருக்கிறார்.

**18. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.**

**– பிரசங்கி. 1.2**

"First Law of Thermodynamics" சக்தி குறித்த விஞ்ஞான விதியை ஆங்கிலத்தில் "Law of conservation of energy and Matter" என்றும் அழைக்கிறார்கள்.

உலகத்தில் உள்ள எல்லாம் (மனிதன், விலங்கினங்கள், தாவரங்கள் ...) சக்தி வடிவத்தில்தான் இருக்கின்றன. ஒரு பொருள் சக்தியாக மாறலாம். சக்தி பொருளாகலாம். இந்த விதியின் இணைப்பைத்தான் Iynstean என்ற விஞ்ஞானி கண்டு பிடித்தார். **"$E=MC^2$"...** என்பது இவரது சூத்திரம்.

உதாரணமாக மரத்தை எரித்தால் வெப்ப சக்தியும் ஒளிசக்தியும் உண்டாகிறது.

எல்லாமே சக்தியின் உருமாற்றங்கள்தான். எல்லாம் மீண்டும் ஆதிநிலைக்கே (தொடக்க நிலைக்கு) போய்விட்டால் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும். இதைதான் மாயை என்று வசனம் சொல்கிறது.

**19. ...சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது... தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு ... மறு முனைவரைக்கும் சுற்றியோடுகிறது. அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. – சங்கீதம் 19:4,5,6,**

பூமிதான் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதுடன் சூரியனையும் சுற்றி வருகிறது. சூரியன் சுற்றி வருகிறது என்பது எப்படி சரியாகும் என்று தான் ஆரம்பத்தில் விஞ்ஞானிகள் நினைத்தனர்.

நவீன கண்டுபிடிப்புக்களின் படி சூரியன் மட்டுமல்ல வான வெளியில் உள்ள எல்லாமே (நட்சத்திரங்கள், கிரகங்கள், வால்நட்சத்திரங்கள்) தங்களுக்கென குறிக்கப்பட்ட வேகத்தில் தன் பாதையில் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன.

அ) சூரியனுக்கு இரண்டு ஓட்டங்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. சூரியன் தன்னைத்தானே 25 நாட்களுக்கு ஒரு முறை சுற்றிக் கொள்கிறது. அது மட்டுமல்லாமல் தன்னுடைய பாதையில் 1 நொடிக்கு 12 மைல் வேகத்தில் **(12 Mile / Sec)** அதாவது 1 மணிக்கு 43,200 மைல் வேகத்தில் ஓடுகிறது. இக்கண்டுபிடிப்புகள் வேதத்தின் வசனங்கள் உண்மையுள்ளவை என்று நிரூபித்துள்ளன.

ஆ) காந்திக்கு என்ற வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தில் **Heat** என்று அர்த்தம் உள்ளது. சூரியனுடைய மேற்பரப்பின் உஷ்ணம் 12,000 டிகிரி ஃபாரன்ஹீட். மையப் பகுதி உஷ்ணம் 4.00.00.000 டிகிரி ஃபாரன்ஹீட் (4 கோடி). இந்த உஷ்ண சக்திக்கு மறைவானது ஒன்றுமில்லை என்று வேதம் கூறுகிறது.

இ) கூடாரத்தை என்று சொல்வது சூரிய குடும்பம் என்று பொருள்படும். சூரியனையும் சூரியனைச் சுற்றி வரும் 9 கிரகங்களையும் (பூமி உட்பட) இது குறிக்கிறது. இதையும் முன்னேயே தெரிவித்திருக்கிறது.

(Evidence: Dakes Bible, Sampling the Psalms by Morris, Ph.D.,)

**20. ... இரண்டு மகத்தான சுடர்களையும் (சூரியன், சந்திரன்) ...**

உண்டாக்கினார்... அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கவும்...நான்காம் நாள் ஆயிற்று...

– ஆதி. 1 : 16,17,19

தேவன் ... மனுஷனை சிருஷ்டித்தார்... ஆறாம் நாள் ஆயிற்று.

–ஆதி. 1 : 27,31.

அ) Moon Quakes (சந்திர அதிர்ச்சிகள்) இன்றும் சந்திரனில் இருப்பதாக கண்டுபிடித்துள்ளனர். சந்திரன் தோன்றி மில்லியன் வருடங்கள் ஆகியிருந்தால் சந்திரன் முழுதும் உறைந்து திடப் பொருளாகியிருக்கும். திரவப் பொருள் இருப்பதால்தான் அதிர்ச்சிகள் ஏற்படுகின்றன.

ஆ) சூரியனின் தீங்கான கதிர்களில் இருந்து உலகத்தைக் காக்கும் **Magnetic field** குறைந்துக் கொண்டே வருகிறதாம். கி.பி.3991க்குள் (இயேசு கிறிஸ்துவின் 2-ம் வருகை தாமதித்தால்) இந்த காந்த மண்டலமே இல்லாமல் போய் விடுமாம்! இந்த காந்த மண்டலம் பாதியாகக் குறைய 1400 வருடங்கள் ஆகிறதாம். இதை **Half-Life** என்று சொல்வார்கள். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இருந்த சக்தியில் 1/3தான் இப்போது உள்ளது. இதனால் **Harmful Radiations** பூமியில் விழுந்து தீங்கிழைத்துக் கொண்டிருக்கின்றன. பூமியின் ஆரம்பக் கட்டத்தில் இந்த சக்தி எவ்வளவாக இருந்திருக்கும் என்று கணக்கிட்டுள்ளனர். அதன்படி பார்த்தால் பூமி உருவாகி சில ஆயிரம் ஆண்டுகளே ஆகியிருக்கும் என்று தெரிய வந்துள்ளது. பல மில்லியன் வருடங்கள் ஆகியிருக்குமானால் இந்த சக்தியே இல்லாமல் போயிருக்கும்.

இ) சந்திரன் பூமியின் இருந்து ஒரு குறிப்பிட்ட வேகத்தில் விலகிச் சென்றுக் கொண்டேயிருக்கிறது. ஆரம்பத்தில் சூரியன் பூமியில் இருந்து 11,500 மைல் **(Roche Limit)** தூரத்தில் தான் இருந்திருக்க வேண்டும். அதை விட அருகில் இருந்திருந்தால் பூமியின் Tidal Forces-ஆல் சந்திரன் நொறுங்கி துண்டுகளாகி சனி கிரகத்துக்கு இருப்பது போல பிரகாசமான ஒளி வட்டங்களாகியிருக்கும். இப்போது 2,39,000 மைல் தூரத்தில்தான் சந்திரன் உள்ளது. பூமி, சந்திரன் தோன்றி லட்சக்கணக்கான ஆண்டுகளாகியிருந்தால் இந்த தூரம் இன்னும் பன்மடங்காக இருந்திருக்கும். (சந்திரன் சுற்று வட்ட பாதையில் இருந்து விலகி அண்ட வெளிக்குள் எங்கேயோ ஒடி போயிருந்திருக்கும்.)

வேதத்தின் 10,000 வருடக் கணக்கே சரி. டார்வினின் பரிணாமம் கொள்கை மேல் இன்னொரு இடி!

மனிதன் உருவாகி சுமார் 10,000 வருடங்கள். சூரிய, சந்திர, பூமி, மனிதனைவிட இரண்டு நாட்கள் மூத்தவை! அவ்வளவுதான்!!

**Evidence:**

1. *Impact Magazine (Aug.82)*
2. *Depletion of the Earth's Magnetic field - by Barnes Thomas. G.*
3. *In the Beginning - By Roger D.G. Price.*

21. ...கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார். ... அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து... மனுஷியாக உருவாக்கி...

–ஆதி.2:21,22

**James Simson** (1811-1870) என்ற விஞ்ஞானி ஒரு **Obstetrics** (மகப்பேறு மருத்துவத்தின் தந்தை) **Edinburgh University-** ல் பணிபுரிந்தவர்.

ஆதியாகமம் 2:21,22 வசனங்கள் அவரைச் சிந்திக்கத் தூண்டின. இவர் காலத்துக்கு முன் அறுவை சிகிச்சையெல்லாம் நாலைந்து பேர் பிடித்துக் கொள்ள அய்யோ, அய்யோ என்ற கூக்குரலுடன் நடக்கும்.

தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரவழைத்து அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுக்கும் போது அவனுக்கு வலி தெரியவில்லையென்றால் அயர்ந்த நித்திரையின் அர்த்தம் என்ன? சிந்தனையின் பலனாக 1847ல் **Chloroform** (குளோரோஃபார்ம்) என்ற மயக்க மருந்தைக் கண்டு பிடித்தார்.

வேதம் விஞ்ஞான ரீதியானது மட்டுமல்ல, அநேக விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் வித்திட்டது.

**22. ஒருவனும் தனக்கு நெருங்கிய இனமாகிய ஒருத்தியை ... அவளைச் சேரலாகாது. நான் கர்த்தர். – லேவியராகமம் 18:6**

நெருங்கிய உறவினர்கள் திருமணம் செய்வதால் பிறக்கும் குழந்தைகள் சில குறைபாடுகளுடன் **(Congenital defects)** பிறக்கின்றன. இதை **Consanguinity of Marriage** என்பர். பெற்றோரின் செல்லில் **(Genes)**-ல் குறையிருக்குமானால் பிள்ளைகளும் அக்குறையுடனேயே பிறக்கிறது. அதனால் பெற்றோருக்கு இருக்கும் வியாதி பிள்ளைகளுக்கும் வருகிறது.

நெருங்கிய உறவில் இருக்கும் உறவினர்களிடையே ஒரே விதமான குறைவுள்ள **Genes** இருக்குமானால் அவர்கள் திருமணம் செய்யும்போது தகப்பன், தாயிடமிருந்து இக்குறை **Genes (Defective Genes)** குழந்தைக்கு வர குழந்தை வியாதியோடு பிறக்கிறது.

இன்றைய டாக்டர்கள் நெருங்கிய உறவினர்கள் திருமணம் செய்ய வேண்டாம் என்று மருத்துவ ஆலோசனைக் கொடுப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

இன்றைய மருத்துவ ஆலோசனையை தேவன் 4000 ஆண்டுகளுக்கு முன்னே இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்திருக்கிறார்!

**23)...நுனித்தோலின் மாமிசத்தை...தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்...**

**–ஆதியாகமம் 17. 11,12**

விருத்தசேதனம் என்பது மருத்துவ உலகில் இன்றைய டாக்டர்களால் பின்பற்றப்பட்டு வரும் **"Circumcisiom"** என்ற அறுவை சிகிச்சை முறையாகும். இது தேக ஆரோக்கியத்துக்கு தேவையான ஒரு சிகிச்சை. புற்றுநோய்க்கான ஆராய்ச்சியில் பல புதிய நன்மைகள் இதனால் கிடைத்துள்ளன.

குழந்தை பிறந்த 8வது நாளில் ஏன் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்? ஏன் அதற்கு முன் செய்யப்படக் கூடாதா? நம் இரத்தத்தை உறைய வைக்கும் இரண்டு காரியங்களில் ஒன்று **"K"** வைட்டமின் ஆகும். குழந்தை பிறந்து 5வது நாளில் இருந்து 7வது நாளுக்குள்ளாகத்தான் சிறுகுடலில் இருந்து **Vitamin K** உருவாகிறது.

இரத்தம் உறைய மற்றைய தேவை **Prothrombin** என்பது. இது குழந்தையின் இரத்தத்தில் பிறந்த 7வது நாளுக்கு மேல்தான் அதிக அளவில் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதனால்தான் இந்த முறையை 8வது நாளில் செய்யச் சொல்லி தேவன் கட்டளையிட்டார். அதற்கு முன் செய்தால் இரத்தம் வீணாகி குழந்தை இறக்க நேரிடும். காரணம் ரத்தம் உறையாது.

தேவனின் இந்த மருத்துவ ஞானம் 4000 வருடங்கள் **Late** ஆக மனிதனுக்கு தெரிந்திருக்கிறது!

ஆதாரம்:


1. *News from Isreal Magazine Sept. 1982*
2. *None of these diseases by S.T. Mc.Million, M.D.,*
3. *Text book of Surgery*


**24. ... ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்.**

**... கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார். அது யோனாவை கரையிலே கக்கி விட்டது. –யோனா 1:17, 2:10**

யோனா 3 நாட்கள் மீன் வயிற்றில் இருந்தது ஒரு கற்பனை சம்பவம்தான் என்று **Modern Theologians...** கூறுகின்றனர். (அப்படியானால் மற்றவர்களைப் பற்றி கேட்கவே வேண்டாம்.)

அ) யோப்பா இன்று **Jaffa** என்றழைக்கப்படுகிறது. அன்றைய தர்ஷீஷ் இன்றைய **England** ஆகும். சரித்திரப் பூர்வமான இடத்தில்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது.

ஈ) பெரிய மீன் என்ற வார்த்தைக்கு மூலபாஷையில் (கிரேக்கு) **"Ketos"** என்ற பதம் உள்ளது. அதற்கு மிகப் பெரிய கடல் ஜீவன் **(A great aquatic animal)** என்று அர்த்தம். அது பெரிய கடல் ஜந்துவாக அல்லது மீனாக இருக்கலாம். மனிதர்களை முழுவதுமாக அப்படியே விழுங்கக் கூடிய மீன்கள் இன்றும் கடலில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். **Rhinodon Tyricus** (ஒரு வகை சுறா) **Sperm Whale, White Shark, Whale Shark** போன்றவற்றின் வயிற்றில் மனிதர்களை விட பெரிய விலங்கினங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இ) இராப்பகல் 3 நாள் என்பது ஒரு **"Idiomatic Expression"** ஆகும். **24X3=72** மணி நேரங்களாக இருக்கத் தேவையில்லை. உதாரணமாக திங்கள் இரவு யோனாவை விழுங்கிய மீன் புதன் காலையில் (3ம் நாள்) அவனை கக்கி இருக்கலாம். அப்படியென்றால் 38 மணி நேரங்கள்தான் ஆகிறது. **James Bartlery** என்பவர் 1895-ல் ஒரு திமிங்கலத்தால் விழுங்கப்பட்டு அவ்வளவு நேரம் (38 மணி) கழித்து உயிரோடு மீட்கப்பட்டதற்கு ஆதாரமான செய்திகள் உண்டு.

ஈ) எந்த மீனின் வயிற்றிலும் விழுங்கப்பட்ட ஜீவன் சாகும் வரையில் ஜீரணம் தொடங்காது. திமிங்கலங்களின் வயிற்றில் பிராணவாயு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 3 நாளைக்கு எதுவும் சாப்பிடாமல் மனிதன் உயிரோடு இருக்க முடியும். 40 நாட்களுக்கு வெறும் தண்ணீர் மட்டும் சாப்பிட்டு உயிரோடு இருக்கலாம். இது மருத்துவ உண்மை. யோனாவின் சம்பவம் உண்மையே. கற்பனையோ, கதையோ அல்ல.

ஆதாரம்:

1. *The Bible has the answer*
2. *Answers to tough questions*
3. *More strange facts from the Bible*
4. *The Christian view of science and scripture*

**25. தேவன் தமது ஆவியினாலே வானத்தை அலங்கரித்தார். அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கியது... அவரைக் குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம், அவருடைய வல்லமையின் இடி முழக்கத்தை அறிந்தவன் யார். – யோபு 26 : 13, 14**

வானத்தில் நட்சத்திரங்கள் கூட்டங்கூட்டமாக இருக்கின்றன. இதை **"Galaxy"** என்பர். ஒவ்வொரு **Galaxy-** யிலும் 100 பில்லியன் நட்சத்திரங்கள் ஈர்ப்பு விசையால் இணைந்துள்ளன. இப்படி பல **Galaxy-** கள் ஒன்று சேர்ந்து கொத்து கொத்தாக உள்ளன. இந்த கொத்துக்களை **"Clusters"** என்பர்.

நம்முடைய பூமியிருக்கும் **Galaxy "Milky Way"** எனப்படும். **Milky Way** இருக்கும் **Galaxy** மட்டும் இன்னும் 20 **Galaxy** கள் சேர்ந்து கொத்தாக உள்ளது. இதை **"Local Group"** என்பர். சில **Galaxy Cluster**-ல் **10000 Galaxy** கூட இருக்கும்.

**Local Group-** க்கு மிக அருகில் உள்ள அடுத்த **Cluster-**ன் தூரம் 500 பில்லியன் கி.மீ. ஆகும். மிகத் தொலைவில் உள்ள **Cluster** இதை விட 20 மடங்கு தொலைவில் உள்ளது. இதற்கு பிறகு உள்ளதை விஞ்ஞானிகளால் காண முடியவில்லை.

இந்த Cluster-களெல்லாம் வானவெளியில் ஓடிக் கொண்டிருக்கின்றன. (சூரியனும் தன் பாதையில் சுற்றுகிறது என்பதற்கு இதுவும் சான்று). Cama Gluster-ன் வேகம் 1 Sec.க்கு 7000கி.மீ! ஒவ்வொரு Gluster-ல் உள்ள Galaxyகளும் Sec.க்கு பல 100 Mile வேகத்தில் சுற்றுகின்றன.

இது நமக்கு தெரிந்த மிகமிக குறைந்த பட்ச விஷயங்களே. முழுவதும் யாருக்கும் தெரியாது.

**26. தேவன் ... சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார். பின்பு பூமியானது... நாட்டு மிருகங்களையும்... காட்டு மிருகங்களையும் ஜாதிஜாதியாக பிறப்பிக்கக்கடவது என்றார். – ஆதி. 1. 21, 25**

உயிரினங்கள் தங்களுடைய உறுப்புக்கள் சிலவற்றை அதிகமாக பயன்படுத்தியதால் அவை வளர்ந்து, அந்த குணம் அப்படியே சந்ததிக்கு கடந்து மாறுதலினால் புதுபுது உயிரினங்கள் தோன்றியிருக்கின்றன என்று பரிணாமக் கொள்கையை நிரூபிக்க முயற்சித்தோர் இதை "Inheritance of acquired characters" என்று அழைப்பர். தட்டான் அதிகமாக உபயோகப்படுத்தும் வலது கை பெரிதாவதை கண்டு "Lamark" இக்கொள்கையை உருவாக்கினார். (தட்டானின் மகனுக்கு பிறவியிலேயே வலதுகை பெரிதாக இருப்பதில்லையே!)

இவர் கூறுகிறார்: ஒட்டகசிவிங்கிக்கு ஆரம்பத்தில் சிறிய கழுத்துதான் இருந்ததாம். தரையில் இருக்கும் புல் தீர; மரத்தின் இலைகளை பறிக்க அது முயற்சிக்க, கழுத்து நீண்டு விட்டதாம். (அப்படியென்றால் ஏன் மற்ற மிருகங்களுக்கு கழுத்து நீளவில்லை?) இவர் கொள்கைப்படி பார்த்தால் இப்போது காலை விரித்துக் கொண்டு சிரமத்துடன் புல்லைச் சாப்பிடுகிற ஒட்டகசிவிங்கியின் கழுத்து மீண்டும் ஏன் சிறியதாகவில்லை?

கொக்கின் கால்கள் நீரில் இறக்கைகள் நனையாமலிருக்க முயற்சித்து தூக்கியதால் பெரிதாக நீண்டு விட்டதாம்! (கால்கள் நீளமாக மாறியிருப்பதைவிட வாத்தாக மாறியிருந்தால் நீரில் நீந்திப் போகலாமே?) கேள்விகளுக்கு ... பதில் சொல்ல முடியவில்லை.

"Wisemen" Lawmark- ன் கொள்கையை எதிர்த்து எலிகளின் வாலை 19 சந்ததிகளுக்கு குட்டையாக வெட்டி விட்டனர். ஆனால் 20வது சந்ததியில் எலியின் வால் நீளமாக இருந்தது. நம் சந்ததியின் ஆண்கள் தலைமுடியை வளராதவாறு வெட்டிக் கொள்கின்றனர். ஆனால் அடுத்த சந்ததிக்கு முடி நீளமாக வளராமலா போகிறது. அவரது கொள்கையை இப்போது விஞ்ஞான உலகம் ஏற்றுக் கொள்வதில்லை.

**27. ...ஒரு இமைப்பொழுதிலே (In the moment in the twinking of an eye) நாம் எல்லோரும் மருரூபமாக்கப்படுவோம். –1 கொரி. 15:51**

அந்த இரவில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற 2 பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான்... திரிகை திரிக்கிற 2 ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள்... வயலில் இருக்கிற 2 பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான். லூக்கா 17 : 34,35,36

பூமி உருண்டையாக இருப்பதாலும் அது சூரியனுக்கு முன் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதாலும் பல தேசங்களில் பல விதமான நேரங்கள் பின்பற்றப்படுகின்றன. இந்தியாவில் இரவு நேரமாக இருக்கும்போது அமெரிக்காவிற்கு அது பகல் நேரமாக இருக்கும் - இது விஞ்ஞான உண்மை. எல்லோருக்கும் தெரிந்ததே.

இயேசுவின் வருகையில் ஒரு இமைப் பொழுதில் உலகத்தில் உள்ள எல்லா பரிசுத்தவான்களும் எடுத்துக் கொள்ளப்படுவர். மேற்கூறப்பட்ட விஞ்ஞான உண்மை (புவியியல் உண்மை?!).

ஒரு படுக்கையில் படுத்திருக்கிற 2 பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். (உறங்குதல் இரவு நேரத்தில் செய்யப்படுகிற ஒரு செயலாகும்). அதே வினாடியில் இயந்திரம் அரைத்துக் கொண்டிருக்கிற 2 ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள். (இயந்திரம் அரைப்பது மத்தியான வேளையில் செய்யப்படும் செயல்). அதே வினாடியில் வயலில் வேலை செய்துக் கொண்டிருக்கும் 2 பேரில் ஒருவர் எடுக்கப்படுவார்.

(வயல் வேலைகள் பகல் நேரத்தில் செய்யப்படும்)

அதாவது பூமியில் ஒரு பிரதேசத்தில் இரவாக இருக்கும்போது மற்ற இடத்தில் மத்தியானமாகவும், இன்னொரு நாட்டில் காலையாகவும் இருக்கும். இந்த புவியியல் உண்மை லூக்கா 17ல் கூறப்பட்டுள்ளது; சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே!

ஆதாரம்: **World Christian Encyclopedia.**

**28. ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே (தண்ணீர்) நிலை கொண்டிருக்கிற பூமியும் உண்டாயின... – 2 பேதுரு. 3:5**

பூமியின் மேற்பரப்பில் 70% தண்ணீர்தான் இருக்கிறது. மனிதன், மற்றும் உயிரினங்களின் சரீரத்திலும் 2/3 பங்கு தண்ணீர்தான் உள்ளது. இதனால் பூமி தண்ணீர் கிரகம் என்று அழைக்கப்படுகிறது. பூமியில் மட்டும் உயிரினங்கள் இருப்பதற்கு காரணம் பூமியில் தண்ணீர் இருப்பதே.

70% தண்ணீர், மீதிதான் நிலப்பரப்பு. எனவே 70% தண்ணீரிலிருந்துதான் 30% நிலப்பரப்பு உருவாயிருக்க முடியும். காரணம் நிலப்பரப்பின் அளவு தண்ணீரைவிட குறைவு.

தண்ணீரும், நிலப்பரப்பும் சேர்ந்து தான் பூமிக்கு உருண்டை (கோள) வடிவத்தைக் கொடுக்கின்றன. தண்ணீர் இல்லாமல் வெறும் நிலப்பரப்பு மட்டும் இருந்தால் பூமியைப் பார்க்க உருண்டை வடிவமாக இருக்காது. 70% தண்ணீர்தான் பூமிக்கு கோள வடிவத்தைக் கொடுக்கிறது. பூமிக்கு உருண்டையான உருவத்தை உருவாக்க நிலத்தைவிட நீர் தான் அதிக முயற்சி எடுத்துள்ளது.

மேற்கண்ட விஞ்ஞான (பூகோள) உண்மையை வசனம் நிரூபிக்கிறது.

**29. a) மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. சகல மாம்சத்துக்கும் (உயிரினங்களுக்கும்) இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்கு சமானம் ... சகல மாம்சத்தின் உயிரும் அதன் இரத்தந்தானே. – லேவியராகமம் 17:11,14**

நம்முடைய சரீரத்திலுள்ள திசுக்களுக்கு **(Cell)** தேவையான பிராணவாயுவையும், மற்ற இரசாயனப் பொருட்களையும் எடுத்து சென்று அளிப்பது இரத்தமே. இரத்தம் அந்த வேலையை செய்வதால்தான் நாம் உயிர் வாழ்கிறோம். இரத்த ஓட்டம் நின்று போனால் (இருதயம் நின்றால்) மரணம் ஏற்படுகிறது. விபத்துக்களில் அதிக இரத்தம் விரயமானாலும் இறக்க நேரிடுகிறது. இதிலிருந்து நம் உடம்பின் உயிர்த்தன்மை இரத்தத்தில்தான் இருக்கிறது என்று அறியலாம்.

உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்கு தேவையானவை அனைத்தும் இரத்தத்தில்தான் இருக்கிறது என்று **William Harwy** 19ம் நூற்றாண்டில்தான் கண்டு பிடித்தார்.

ஆனால் வேதம் இதை 2500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அறிவித்திருக்கிறது.

**b) எல்லா மாமிசமும் ஒரே விதமான மாமிசமல்ல. மனுஷனுடைய மாமிசம் வேறே. மிருகங்களுடைய மாமிசம் வேறே, மச்சங்களுடைய மாமிசம் வேறே, பறவைகளுடைய மாமிசம் வேறே. – 1கொரிந்தியர் 15:39**

வேதம் மனிதன், விலங்குகள், மீன்கள், பறவைகள் இவைகளின் மாமிசம் வேறு, வேறு, (நான்கு வகைப்படும்) என்கிறது. ஆனால் அவிசுவாச விஞ்ஞானிகள் எல்லா மாமிசமும் ஒரே புரோட்டோபிளாசத்தினால் ஆனது என்று எண்ணி வந்தனர். ஆனால் நவீன கண்டு பிடிப்பின்படி சைட்டோபிளாசம், நியூக்கிளியஸ் செல் சேர்ந்து நான்கு விதமான மாமிச

அமைப்புகள் உயிரினங்களில் உள்ளது என்று கண்டறிந்து வேத கூற்றை சரிதான் என்று மெய்ப்பித்துள்ளனர்.

ஆதாரம்: **The world greatest book (Bible)**

**- by Richard W. De Haan.**

**30) அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல் ஏறப்பண்ணுகிறார். அவைகள் மேகத்தி–ருந்து மழையாய் சொரிகிறது. – யோபு 36:27**

அவர் தண்ணீர்களை தம்முடைய கார்மேகங்களில் கட்டி வைக்கிறார். அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை. - யோபு 26:8

அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி மின்னலினால் மேகத்தை சிதறப் பண்ணுகிறார். - யோபு 27:11

மேகங்கள் நிறைந்திருந்தால் மழையை பூமியின்மேல் பொழியும். - பிரசங்கி 11:3

எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும். - பிரசங்கி 1:7

... பூமியின் கடையாந்தரங்களில் இருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றை தமது பண்டக சாலையில் இருந்து புறப்படப் பண்ணுகிறார். - சங்கீதம் 135:7

தம்முடைய சுவாசத்தினால் தேவன் குளிரைக் கொடுக்கிறார். அப்போது ஜலத்தின் மேற்பரப்பானது உறைந்து போகும். யோபு 37:10.

கடலின் தண்ணீர் 93 மில்லியன் மைல் தொலைவில் உள்ள சூரிய உஷ்ணத்தினால் ஆவியாகி புவியீர்ப்பு விசையை மீறிக் கொண்டு மேகத்திலிருந்து மழையாகப் பொழிகிறது. (பிர.11.3)

வான வெளியிலுள்ள கிரகங்களின் துகள்களையும், தூசிகளையும் சுற்றி ஆவியான தண்ணீர் மேகமாக மாறுகிறது. மேகங்கள் புவியீர்ப்பு விசையால் இழுக்கப்படாமல் இருக்க பூமியில் இருந்து மேல் நோக்கி காற்று வீசுகிறது. (யோபு 26:8, சங் 135:7)

மேல்காற்றை மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு தண்ணீரின் அளவு அதிகமாகும்போது (மழை துளியின் அளவு 1/10”) தண்ணீர் மழையாக பூமியின் மேல் விழுகிறது. **(By watering He wearieth the thick clouds)** (பிர. 11:3)

ஆவியாகக் கூடிய தண்ணீர் எல்லா நீர் நிலைகளிலிருந்தும்தான் என்று விஞ்ஞானிகள் நினைத்திருந்தனர். ஆனால் தற்போது கடலில் இருந்துதான் (பூமியின் கடையாந்தரம்) முக்கியமாக தண்ணீர் ஆவியாகிறது (அணுவைப் போல) என்று கண்டுபிடித்துள்ளனர். (சங். 135:7)

நதியிலுள்ள தண்ணீர் சமுத்திரத்திற்கு சென்று அங்கிருந்து ஆவியாகி மேலே சென்று மேகமாகி மழையாக பொழிகிறது. நீர் மலைகளில் விழுந்து நதியாகி மீண்டும் சமுத்திரத்திற்கே செல்கிறது. (பிர. 1:7)

மழைத் துளிகள் உருவாக தேவையான மின்சாரம் உடன் உருவாகும் மின்ன-னால் கிடைக்கிறது. **(He makes the lightning for rain)** (யோபு 27:11)

தண்ணீர் குளிராக்கப்பட்டதும் விரிவடைந்து பனிக்கட்டியாக மாறுகிறது. இலேசாகிறது. தண்ணீருக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு? தண்ணீர் உறையும் நிலை வரும்போது ஒரு சட்டம் அங்கு கிரியை செய்து விரிவடைய வைத்து இலேசான பனிக்கட்டியாக மாற்றுகிறது. (சட்டம் இருந்தால் சட்டத்தை உருவாக்கியவரும் நிச்சயம் உண்டு) நீர் நிலைகளின் மேற்பரப்பு மட்டும் பனிகட்டியாக மாறுவதால் உட்பகுதி தண்ணீர் உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான உஷ்ணத்துடன் இருக்கிறது. உயிர்கள் பனிகட்டியால் அமுந்தி இறப்பதில்லை. (விஞ்ஞானிகளுக்கு முன்பே, வேத வசனங்கள் விஞ்ஞானத்தை அருமையாக தெரிவித்துள்ளன. யோபு 37:10)

**31. பூமியெங்கும் வழங்கிய பாஷையை கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால் அதன் பேர் பாபேல் எனப்பட்டது. – ஆதியாகம் 11:9**

பாபேல் கோபுர சம்பவத்திற்கு முன் உலகமெங்கும் ஒரே பாஷைதான் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

பாபேல் சம்பவத்திற்கு பிறகுதான் உலகின் பல்வேறு பாஷைகள் தோன்றியது என்று வேதம் அறிவிக்கிறது.

மொழிகளை ஆராய்ச்சி செய்பவர்களை **"Philologist"** என்பர் **Alfred Trobetti** என்ற மொழி ஆராய்ச்சியாளர் உலகத்தின் மொழிகளெல்லாம் ஒரே இடத்தி-ருந்து ஒரே சமயத்தில் உருவாகியிருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

**Maxmuller...** என்பவரும் இக்கருத்தையே தன் ஆராய்ச்சி நூலில் தெரிவிக்கிறார்.

ஒரே மொழியில் இருந்துதான் பல மொழிகள் பிரிந்தது என்று **"The World History"** என்ற நூலின் அதன் ஆசிரியர் **D. Balasubramaniam** என்ற விரிவுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

நோவா பேழை கடைசியில் தங்கிய அரராத் மலையடிவாரத்தில் இருந்துதான் (மெசபடோமியா) மொழிகள் உருவானதாக இராஜரிஷி கபிரியேல் பச்சேக்கு என்பவர் தேவப்பிரஜையின் திருக்கதை என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். இது ஒரு வேத விளக்க நூல்.

பாபேல் என்ற இடத்தில் தேவன் மொழியை தாறுமாறாக்கினதாலேயே உலகின் பல்வேறு மொழிகள் தோன்றின என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. (தமிழும் அங்கிருந்து தோன்றியது தான். கல்தோன்றி மண்தோன்றா காலத்திலேயே தமிழ் இருந்தது என்பதெல்லாம் வெறும் கப்சா!)

**32) கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமிடத்தில்...உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்...என்று கர்த்தர் சொல்கிறார் என்றான். (ஆதியாகமம் 22:18)**

**...உனக்குள் ... பூமியின் வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்கு பண்ணுகிறார். (ஆதி. 28:14)**

**ஈசாக்கினிடத்தில் ஆண்டவர் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்...(ஆதி. 26.9)**

**Amplified Bible-**ல் **"Who (Isreal) dwell at the Centre of the earth"** என்று உள்ளது. இஸ்ரேலால் (யூதர்களால்) உலகம் ஆசீர்வதிக்கப்பட்டதா? ஆமாம்! ஆமாம்!!

**Albert Einstein** (பௌதிக விஞ்ஞானி), **Henry Perkson** (தத்துவ மேதை), **Sigmund Freud,** (மனோதத்துவ மேதை), **Natarn Mayer Rothschild** **(England -** இருப்புப்பாதை), **Samuel Salamovics Polyacap** (ரஷ்யா-இருப்புப்பாதை), **Fredrick William Hershel** (யுரேனஸ் கிரக கண்டுபிடிப்பு), **David William Peer** (சூரியனின் சுழற்சி-கண்டுபிடிப்பு), **Albert Michelson** **Velocity of Light (1902) Light Waves and their Uses (1899-1903); and**

**Studies in Optics(1927).** (ஒளியின் வேகம்) கண்டு பிடித்தோர் யூதர்களே.

**Abraham Jacob (Laryngoscope), O.M. Shucklass** (அலர்ஜி-சிகிச்சை), **Simon Plexner (Plexner Desontry** - வியாதி கண்டுபிடிப்பு), **Leo Burker (Burkers disease), Pranksham Burk (Termadydis Shampurg** - வியாதி கண்டுபிடிப்பு, தடுப்பு) **Immanuel Lipman (Lipman disease), Jonasalk (Polio** தடுப்பு), **Cellman Abraham (Stepreptomycin), Simon Baruk** (அப்பெண்டிசைடீஸ்-அறுவைசிகிச்சை), **Waserman (Sipilis**-ஐ கண்டுபிடிப்பது), **Ludwick Trapay** (Digitaliss மருந்து), **Mincovsky** (Insulin) **Widall** (டைபாய்டு கண்டுபிடிக்கும் முறை) Carrcoller (Norogean மருந்து) ஆகியோரும் யூதர்களே.

**Emili Perileaner** (Microphone, Gramphone, Internal compustion), **Abraham Shern** (Calculater), **Herman Jones** (Duplicate Rubber), **Abraham Skrainer** (Pertrol தயாரிப்பு) **Instean, Micheal** (அணு ஆராய்ச்சிக்கு வித்திட்டவர்கள்), **Oto Williamrnoll** (Clider), **Wright Brothers** (Aeroplane), **Haintric Hearts** (Radio waves), **Johan Rees** (Telephone - கிரகாம்பெல்லுக்கு முன்பே!) ஆகியோரும் யூதர்களே.

ஆரம்பத்தில் உலக **Map** யூதர்களால் வரையப்பட்டன. வான சாஸ்திரத்துக்கு வழிவகுத்தவர்களும், கொலம்பசின் பயணத்திற்கு காரணமானவர்களும் யூதர்களே! யூதர்களின் ஞானத்தால்தான் **Bank** வந்தது. **Bible -** ஐ உலகத்துக்கு அளித்தவர்கள் யூதர்களே. தேவகுமாரனாகிய இயேசு யூதர் குலத்தில்தான் பிறந்தார்.

**ஆசீர்வாதமான யூதர்கள்.**

**33. ...தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. –ஆதியாகமம் 1:31**

**Evolution Theory**-ன் மற்றொரு வாதம் **"Survival of the fittest"** ஆகும்.

இதன்படி உயிர்களின் ஆரம்ப நிலையில் உயிரினங்களிடையே ஜீவனத்துக்கான போட்டி இருந்ததாம். இந்த போட்டியில் பலமான உயிரினங்கள் நிலைத்து நின்று, மற்றவை அழிக்கப்பட்டதாம். இப்போட்டியின் விளைவினால்தான் உயிரினங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு புதிய உயிரினங்கள் தோன்றினதாம்.

விஞ்ஞானம் என்பது கண்களால் காணக்கூடியதும், சோதனைச் சாலையில் நிரூபிக்கக் கூடியதுமாக இருக்க வேண்டும். ஜீவனத்துக்கான போராட்டத்தில் பலமுள்ளவை நிலைத்து நின்றது என்றால் ஆரம்பத்தில் வாழ்ந்த **"Dianosaurus"** போன்ற இராட்சத விலங்கினங்கள் ஏன் இப்போது இல்லை?

இக்கூற்றின்படி பார்க்கப் போனால் உலகில் பலமுள்ள விலங்குகளான சிங்கம், புலி, ஆகியவை அதிகம் காணப்பட வேண்டும். மேலும் அவை மற்ற பலவீனமான விலங்கினங்களை முழுவதும் அழித்து, பலுகி பெருகியும் இருக்க வேண்டும். இரண்டும் இல்லையே. உதாரணமாக சிங்கத்தின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இந்தியாவில் உள்ளது.

மேலும் பலவீனமான உயிரினங்களான எலி, எறும்புகள், பல்லி, போன்றவை கணக்கிட முடியாத அளவில் உள்ளன.

தேவன் விலங்கினங்களைப் படைக்கும் போது **"Survival of the fittest"** இல்லை. பலமான, பலவீனமான அனைத்து உயிர்களையும் ஒரே நேரத்தில்தான் படைத்தார். நல்லது என்று கண்டார்.

**34. a) வானமும் பூமியும் ஒழிந்து போம்... (மாற்கு 13:31)**

**...பூமியும், வானமும் அகன்று போயின... (வெளி 20:11)**

**...பூமியும்...கிரியையும் எரிந்து அழிந்துபோம். (2 பேதுரு 3:10)**

சக்தியை குறித்த முதல் விதி **First Law of Thermodynamics (Law of conservation of energy and Matter)** ஆகும். இதன் விளக்கம்: ஒரு பொருள் சக்தியாக மாறலாம், ஒரு சக்தி பொருளாக மாறலாம். என்பதுவே. இதற்கு விஞ்ஞானி ஐன்ஸ்டீன் **“$E=MC^2$”** என்ற **Formula** கண்டுபிடித்தார்.

ஆண்டவருடைய வருகையில் உலகிலுள்ள பொருள்களின் மூலகங்களின் அணுக்கள் பிளக்கப்படும். உலகில் உள்ள பொருள்கள் எரிந்து சாம்பலாக மாறும் (சக்தியாக மாறும்). இவ்வாறு உலகம் அழிக்கப்படும் என்று வசனங்கள் கூறுகின்றன.

... என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியை போலவும்... (சங்கீதம் 78:69)

பூமி ஒரு போதும் நிலை பெயராதபடி... (சங்கீதம் 104:5)

...பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது...(பிரசங்கி 1:4)

எரிந்து சக்தியாக மாறின பூமியையும், வானத்தையும் கொண்டு தேவன் புதிய வானத்தையும், பூமியையும் உருவாக்குவார். **Atomic disintegration will be followed by atomic integration.** மறுபடியும் புதிய வானம், பூமியை தேவன் சிருஷ்டிக்கப் போவதால் பூமி நிரந்தரமானது என்று வேதம் கூறுகிறது. அங்கு **Second Law of Thermodynamics** செயல்படாது.

## 35. தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று, வெளிச்சத்தையும், இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்...முதலாம் நாள் ஆயிற்று... – (ஆதியாகமம் 1. 3–7)

தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆள சிறிய சுடரும்... நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்...அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கவும்...நாலாம் நாள் ஆயிற்று (ஆதி.1:16,

17, 19)...வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதை பிரகாசிப்பித்தது...(வெளி.21:23)

4ம் நாள்தான் தேவன் சூரிய, சந்திர, நட்சத்திரங்களை உருவாக்குகிறார். அப்படியென்றால் முதல் 3 நாட்களுக்கு வெளிச்சம் எங்கிருந்து வந்தது?

தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது; என்றவுடன் உருவாகும் வெளிச்சம் சூரிய சந்திரனிடமிருந்து வரவில்லை என்று உணரலாம். இந்த முதல் நாள் வெளிச்சத்திற்கு **“Or”** என்ற வார்த்தை மூல பாஷையில் உள்ளது. 4-ம் நாளில் உருவாக்கப்பட்ட சூரிய, சந்திர ஒளிக்கு **“Maor”** என்ற பதம் உள்ளது. **Light**-க்கு **“Or”**ம், **Light Bearers**-க்கு **“Maor”**ம் உபயோகிக்கப்பட்டுள்ளது. **Light was created on the first day, Light Bearers were created on the fourth day.** இரண்டும் வெவ்வேறு என்று உணரலாம்.

வெளிப்படுத்தின விசேஷ வசனப்படி, தேவனே ஒளியாயிருக்கிறார் என்று அறியலாம். அவருக்கு சூரியன் இல்லாமல் ஒளியை உருவாக்க முடியாதா என்ன? வெளிச்சத்தையும், இருளையும் வெவ்வேறாகப் பிரிக்க தேவன் பூமியை சுழலச் செய்கிறார். பூமி தன்னைத் தானே சுற்றி வருகிறது என்ற அறிவியல் உண்மையை Copper Nickus என்ற விஞ்ஞானி 500 வருடங்களுக்கு முன்பாகத்தான் கண்டுபிடித்தார். ஆனால் வேதத்தில் 6000 வருடங்களுக்கு முன்பாகவே மோசே மூலமாக தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பூமியின் சுழற்சியை வைத்துதான் நாள் கணக்கிடப்படுகிறது. எனவே முதல் நாளிலேயே பூமி சுழல ஆரம்பித்ததால்தான் எஞ்சிய 5 நாட்களில் அவர் செய்த காரியங்களை நாள் கணக்கில் கணக்கிட முடிகிறது.

"ஆதியிலே தேவன்" - என்ற வார்த்தை பிதாவையும், "ஆவியானவர் ஜலத்தின் மேல்" - என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரையும், "வெளிச்சம் உண்டாகக் கடவது" - என்ற வார்த்தை (குமாரன்) இயேசு கிறிஸ்துவையும் குறிக்கிறது.

**36) பூமியின் மேலே வானம் என்னும் ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும்... – (ஆதி. 1:20)**

**அவைகள் (சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்) ... வானம் என்றால் ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது. (ஆதி.1:15)**

ஜீவனுள்ள தலைகளின்மேல் பிரமிக்கத்தக்க வச்சிரப் பிரகாசமான ஒரு மண்டலம் இருந்தது. (எசேக்கியேல் 1.22)

...அவன் 14 வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான். (2 கொரிந்தியர். 12.2)

வானத்தில் 3 பிரிவுகள் இருப்பதாக விஞ்ஞான உலகம் கண்டறிந்துள்ளது.

ஆதியிலே தேவன் வானத்தை ... என்ற வசனத்தில் வானத்தை என்ற வார்த்தைக்கு **"Shamayim"** என்ற வார்த்தை உள்ளது மூல பாஷையில் (எபிரேயு). இது பன்மைச் சொல் ஆகும் எனவே 1க்கு மேற்பட்ட வானங்கள் உண்டு என்று அறியலாம்.

முதல் வானம்: இது பறவைகள் பறக்கும் வானம் எனலாம். அதாவது **Air surface ( Gravitation Area).** இந்த வானத்தை அடுத்து காற்று கிடையாது.

இரண்டாம் வானம்: இது சந்திரன், கிரகங்கள், சூரியன், நட்சத்திரங்கள், **Galaxcies, Clusters,** உள்ள வானம். இவை காற்றில்லாத வெற்றிடமான வானமாகும். மனிதன் தகுந்த ஏற்பாடுகள் **(Oxygen)** இல்லாமல் இந்த வானத்துக்கு சென்றால் உயிருடன் திரும்ப முடியாது.

மூன்றாம் வானம்: இதுதான் தேவன் இருக்கும் ஸ்தலம். விஞ்ஞானிகள் இரண்டாம் வானத்துக்குப் பிறகு எதுவும் தெரியவில்லையென்றும், கும்மிருட்டாக இருப்பதாகவும், அதற்கு பிறகு என்ன இருக்கிறது என்று காண இயலவில்லை என்றும் தெரிவித்து விட்டனர். இந்த மூன்றாம் வானம் எப்படியிருக்கும் என்று மூளை அறிவினால் விளங்கிக் கொள்ள முடியாது. விளக்கிச் சொல்லவும் இயலாது. வசனங்கள் இதை விவரிக்கிறது.

ஆதாரம்: *1. The Genesis Record*

*2. The God of Creation*

**37. பூமி...ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது...வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாக பிரித்தார்... ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று...(ஆதி. 1: 1, 4, 9)**

நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்... (சங்கீதம். 102.25)

என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி... (ஏசாயா 48.13)

...வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி... (சகரியா 12.1)

பல மில்லியன் வருடங்களுக்கு முன்பே தேவன் உலகை படைத்து விட, பின் தேவதூதன் லூசிபர் விழுந்துப் போக, பூமி ஒழுங்கின்மையும், வெறுமையுமாகி விடுகிறது. தேவன் மீண்டும் பூமியை சீர்படுத்தி மனிதனை படைக்கிறார் என்ற தவறாக கருத்துக்கள்

சில உண்டு. விஞ்ஞானிகளின் கருத்துக்களை நம்பி, அவர்களுடன் ஒத்துப் போக விரும்பிய சிலரின் கருத்துக்களே இவை.

முதல் நாளில் தேவன் பூமியை சிருஷ்டிக்கும் போது வடிவமில்லாமல் வெறுமையாய் இருந்தது. தேவ ஆவியானவர் அசைவாடி ஒரு ஒழுங்கான உருவத்தை கொண்டு வருகிறார். அவர் அசைவாடிய ஜலத்தில்தான் பூமியின் சிருஷ்டிப்பிற்கு தேவையான மூலகங்கள் இருந்தன. தேவன் 3வது நாள் சொன்ன வார்த்தையின் **energy** -யால் ஆகாய விரிவிற்கு கீழிருந்த தண்ணீரில் ரசாயன பௌதிக மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாறு வெட்டாந்தரை தண்ணீருக்கு மேலே எழும்பினது.

வடிவமில்லாமல் வெறுமையாக முதல் நாளில் உருவாக்கப்பட்ட பூமி **(as a water matrix)** இப்போது வடிவம் பெற்று திடப் பொருளாக, வெட்டாந்தரையாக மாறி விடுகிறது. கடலும் வெட்டாந்தரையும் சேர்ந்து தான் பூமிக்கு கோள உருவத்தை அளிக்கிறது.

இவையெல்லாம் 3 நாட்களுக்குள் முடிந்துவிட்டன. அதனால்தான் சாயங்காலமும், விடியகாலமும் ஆகி; என்ற வார்த்தையை ஒவ்வொரு நாளின் முடிவிலும் ஆவியானவர் உபயோகிக்கிறார். அந்த ஒவ்வொரு நாளும் இப்போது இருப்பது போலவே 24 மணி நேரங்களை உடையதாகவே இருந்தது. காரணம் முதல் நாளில் தேவன் வெளிச்சத்தையும் இருட்டையும் பிரிக்கும் போதே பூமி சுழல ஆரம்பித்து விட்டது. (சுழலாவிட்டால் வெளிச்சமும் இருளும் எப்படி பிரியும்?)

அப்படி மில்லியன் வருடங்களுக்கு பிறகு தேவன் பூமியை சீர்படுத்தியிருந்தால் மெனக்கெட்டு 4ம் நாளில் சூரிய, சந்திர, நட்சத்திரங்களை ஏன் படைக்க வேண்டும். முன்பிருந்தவற்றையே அப்படியே வைத்திருக்கலாமே!

மில்லியன் வருடங்களுக்கு முன்பாக தேவன் உலகத்தை படைத்திருந்தால் உலகதோற்ற முதல் முடிவு வரை நடந்த அத்தனை காரியங்களையும் 1462 பக்கங்களையுடைய வேத புத்தகத்தில் அடக்கி சொல்லியிருக்கவும் முடியாது.

## 38. ...வானமும், பூமியும், சர்வசேனையும் உண்டாக்கப்பட்டு தீர்ந்தன.

– ஆதி. 2:1

**நான் பூமியை அஸ்திபாரப்படுத்தின போது நீ எங்கேயிருந்தாய் ? நீ அறிவாளியானால் அதை அறிவி... அப்போது விடியகாலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவ புத்திரர்கள் எல்லாரும் கெம்பீரித்தார்களே! –யோபு 38 : 4–7.**

இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்கள் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லோரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாக இருக்கிறார்கள் அல்லவா? (எபிரேயர் 1:14)

ஆதியாகமம் 1:1க்கு முன்பே மக்கள் வாழ்ந்து, நியாயத்தீர்ப்பு நடந்து, அதில் மோட்சத்துக்கு சென்றவர்கள் இப்போது தேவதூதர்களாக இருக்கின்றார்கள் என்பது ஒரு சிலரின் கருத்து.

வேதத்தை கவனித்தால் மனிதனுக்கு சமீபத்தில்தான் தேவதூதர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது புரியும். யோபு-வின் புத்தகத்தில் அப்போது விடியற்காலத்து நட்சத்திரங்கள்... கெம்பீரித்தார்களே என்று உள்ளது. விடியற்காலத்து நட்சத்திரங்கள் என்பது தேவதூதர்களை குறிக்கிறது. 3வது நாளில் தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தியபோது தேவதூதர்கள் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். எனவே 3வது நாளுக்கு முன்னதாகவே இவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறியலாம்.

இந்த தேவ தூதர்கள் முதல் நாளுக்கு முன்னேயும் உருவாக்கப்படவில்லை. இவர்கள் வானத்தின் சர்வசேனை **( Hosts of Heaven )** என்று வசனம் கூறுகிறது. எனவே வானம் என்ற **Heavens** உருவாக்கப்பட்ட முதல் நாளில் தான் தேவதூதர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

முதல் நாளுக்கு முன்னதாகவே தேவதூதர்கள் உருவாக்கப்படவேண்டிய அவசியமும்

இல்லை. காரணம் இரட்சிக்கப்படப் போகிறவர்களுக்காக பணிவிடை ஆவிகள்தான் இவர்கள். இதனால் தேவதூதர்கள் மனிதர்களுக்காக படைக்கப்படுகிறார்கள் என்று அறியலாம்.

இதிலிருந்து தேவதூதர்கள் மனிதன் உருவாக்கப்படுவதற்கு வெகு சமீபத்தில் (1ல் இருந்து 3ம் நாளுக்குள்) உருவாக்கப்பட்டனர் என்று உணரலாம்.

3ம் நாளிலேயே தேவ தூதர்கள் பாடியிருக்கிறார்கள். இப்போது நாம் காணும் வானத்து நட்சத்திரங்கள் 4ம் நாளில்தான் படைக்கப்பட்டது. இதிலிருந்து விடியற்காலத்து நட்சத்திரங்கள் என்பது தேவதூதரைத்தான் குறிக்கிறது என்று உணரலாம்.

**39. பூமியானது புல்லையும்... விதையை பிறப்பிக்கும் பூண்டுகளையும், ...விதையையுடைய கனிகளை கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்து; தேவன் அது நல்லது என்று கண்டார். – ஆதியாகமம் 1:12**

**...தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது... – (ஆதி.1:11)**

புல், பூண்டு, மரங்கள் என்று மூன்று பிரிவான தாவரங்களை உருவாக தேவன் கட்டளையிடுகிறார். இன்றும் உலகில் நாம் காணும் தாவர இனங்களில் இதே மூன்றுப் பிரிவைத்தான் காண்கிறோம். எந்தவிதமான மாற்றமும் இல்லை.

முதல் வகை (புல்), இரண்டாம் வகை (பூண்டுகள் எனப்படும் செடிகள்), மூன்றாம் வகை (மரங்கள்). **English Bible-ல் 1. Grass 2. Herb 3. Trees** என்று இருக்கிறது.

விதை முதலில் வந்ததா? மரம் வந்ததா? என்ற கேள்விக்கு விஞ்ஞானம் இன்றுவரை பதில் சொல்லவில்லை. வேதம் திட்டவட்டமாகச் சொல்கிறது; மரம்தான் முதலில் வந்தது என்று! தேவன் முதலில் விதையை மட்டும் படைத்திருந்தால்; அதை புதைத்து, எருவிட்டு, தண்ணீர்பாய்ச்சி வளர்க்க ஆள் இல்லை. காரணம் மனிதன் இன்னும் உருவாக்கப்படவில்லை. அதனால் மூன்றாம் நாளில் தேவன் ஞானமாக வளர்ந்த தாவரங்களையே அவற்றில் விதையையும் வைத்து படைத்து விடுகிறார்.

தங்கள் தங்கள் ஜாதியின் படிதான் பூமி பூண்டுகளையும், மரங்களையும் இன்றும் முளைப்பிக்கிறது. இது நடைமுறையில் காணும் ஒன்று. ஒரு மாமரத்தின் விதை ஒரு தென்னை மரத்தை இன்றைக்கும் முளைப்பிப்பதை நாம் காணமுடிவதில்லை. ஒரு ஜாதியில் இருந்து இன்னொரு ஜாதி தோன்றும் என்ற டார்வினின் கொள்கை வேதத்திலும், நடைமுறையிலும் இல்லாத ஒன்று.

**40. சாயங்காலமும் விடியகாலமுமாகி 3ம் நாள் ஆயிற்று. ...சகலவித பூண்டுகளையும், கனிமரங்களையும், விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன்... – (ஆதி. 1 : 13,29)**

தாவர இனத்தை 3வது நாளில் உருவாக்கியது ஏன்? தாவரத்திற்கு தேவையான வெளிச்சத்தையும், ஜலத்தையும், நிலத்தையும் உருவாக்கிவிட்டு பிறகு ஞானமாக தாவரங்களை உருவாக்குகிறார்.

மேலும் தாவரங்களை உணவாக உண்ணப் போகிற மனிதனும், மற்ற உயிரினங்களும் ஒருசில நாட்களில் உருவாக்கப்படப் போகிறதால் அவர்களின் ஆகாரமான தாவரத்தை அதற்கு முன்னதாக உருவாக்க தேவன் ஞானமுள்ளவராயிருந்தார்.

மேலும் தாவரங்கள் பகல் வேளைகளில் கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு பிராணவாயுவை வெளிவிடுகின்றன. இந்த கரியமிலவாயு தாவரங்களின் ஒளிச் சேர்க்கைக்கு **(Photo synthesis)** பயன்படுகிறது. மனிதர்களும், மிருகங்களும் பிராணவாயுவை எடுத்துக்

கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடுகின்றனர். எனவே மனிதர்களுக்கு தேவையான பிராணவாயுவை வெளிவிடும் தாவரங்களை முதலில் தேவன் உருவாக்குகிறார். மனிதர்கள் வெளிவிடும் கரியமில வாயுவை தாவரங்கள் உபயோகிப்பதால் கரியமில வாயுவின் அளவு நமது வாயுமண்டலத்தில் அதிகமாகாமல் பாதுகாக்கப்படுகிறது. தாவரங்கள் மகரந்த சேர்க்கையின் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன. காற்றின் மூலமாகவோ, சிறு பூச்சிகள் பறவைகள் உடலில் ஒட்டிக் கொண்டோ ஒரு மலரில் இருந்து இன்னொரு மலருக்குச் செல்ல முடியும். இந்த மகரந்தச் சேர்க்கைக்குத் தேவையான உயிரினங்களை தேவன் அடுத்த சில நாட்களில் மிக அறிவாக உருவாக்குகிறார்.

**41. சாயங்காலமும் விடியகாலமும் ஆகி முதலாம் நாள் ஆயிற்று...2ம் நாள் ஆயிற்று...3ம் நாள் ஆயிற்று...4ம் நாள்... 5ம் நாள்...6ம்...(ஆதியாகமம் 1)**

சிலர் இவ்வுலகை சிருஷ்டிக்க ஆன ஆறு நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒரு ஆயிரம் வருடங்களுக்கு சமம் என்கின்றனர். இதற்கு 2 பேதுரு 3:8ஐ தவறாக உபயோகிக்கின்றனர்.

படைப்பின் ஒவ்வொரு நாளும் சாயங்காலமும், விடியகாலமுமாகி ஒரு நாள் ஆயிற்று - என்ற வார்த்தையுடனேயே முடிகின்றன. 1நாள் 1000 வருடம் என்றால் சாயங்காலமும்... விடியற்காலமும் என்ற பதத்தை ஆவியானவர் உபயோகப்படுத்தியிருக்க மாட்டார்.

தாவர இனங்கள் மூன்றாம் நாளில் உருவாக்கப்படுகின்றன. அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்குத் தேவையான உயிரினங்கள் 5, 6 நாட்களில்தான் உருவாகின்றன. ஒவ்வொரு நாளும் ஆயிரம் வருடம் என்று கணக்கிட்டால் சுமார் 2000 அல்லது 3000 வருடங்கள் கழித்துதான் உயிரினங்கள் உருவாகின என்று ஆகிறது. அதுவரை தாவரங்கள் எப்படி இனப்பெருக்கம் செய்தன என்பது கேள்விக் குறியாகிறது.

காரணம் சிறுபூச்சிகள் ( உம்: வண்ணத்துப்பூச்சி) பறவைகள் (உ.ம்: தேன் சிட்டு) உடலில் ஒட்டிய மகரந்தத்தூள்கள் மூலம் தான் இனப்பெருக்கம் தாவரங்களில் நடைபெறுகிறது. 24 மணிநேர அளவுடைய 6 நாட்களில்தான் தேவன் அனைத்தையும் சிருஷ்டித்தார். ஆயிர வருடம் கருத்து தவறு.

**42. சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும். பூமியின் மேலுள்ள ஜனங்களுக்கு தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்கு பயந்து எதிர் பார்த்திருக்கும் மனுஷருடைய இருதயம் சோர்ந்து போகும்.**

**அப்பொழுது மனுஷ குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால்... – லூக்கா 21:25–28**

சூரியனை வெகு தூரத்தில் சுற்றுவதும், மணிக்கு 70,000 மைல் வேகத்தில் செல்லுவதும், 76 ஆண்டுக்கொரு முறை பூமியை அடுத்து வருவதுமான ஒரு வால் நட்சத்திரம் **(Hally's comet)** கி.பி 66ல் தோன்றியதும் எருசலேம் நகரம் அழிந்தது. உயிர்ச்சேதமும் பொருள்சேதமும் கணக்கில் அடங்காது.

கி.பி. 1910ல் மீண்டும் தோன்றியது, தொடர்ந்து உலகப் பெரியோர் பலரும் பிரபல அரசரும் இறந்தனர். உலகப் போர் மூண்டு உலகம் தத்தளிப்பிற்குள்ளானது.

30.3.85ல் ஒரு விஞ்ஞானி இந்த வால் நட்சத்திரத்தை அழித்து விடுங்கள். இது உலக சமாதானத்தை அழித்து விடும் என்று தெரிவித்தார்.

ஆனால் அது அழிக்கப்படாமல் கி.பி. 1986 ஏப்ரல் 11ம் தேதி பூமியை மிக அருகில் (3.5 கோடி மைலுக்கப்பால்) 7கோடி மைல் நீளமுடைய வாலுடன் வெற்றிகரமாக கடந்து சென்றது. உலக மக்கள் இதனை ஒரு மரண தூதனாக நினைத்து நடுங்கினர். எதிர் பார்த்தபடியே **"Aids"** மிக விரைவில் பரவி அமெரிக்காவில் கணக்கிட முடியாதோர் இறந்தனர்.

95க்குள் உலகம் முழுவதும் பரவி, கோடிக்கணக்கானோர் மரணத்தருவாயில் இருக்கின்றனர். ஆப்பிரிக்கா அழிவின் பாதைக்கே சென்று விட்டது. 3ம் உலக யுத்தத்திற்கான அறிகுறிகள் ஆரம்பமாகியுள்ளன.

3ம் உலக யுத்தம் ஒரு அணு ஆயுத யுத்தமாக இருக்கும் என்பதால் உலகத்திற்கு அதன் பாதிப்பு அதிகமாகி அழிந்து விடும். பூமி தன் பாதையில் இருந்து விலகும் என்பதால் சூரியக் குடும்பமே அழிந்து விடுமே என்ற பயம் விஞ்ஞானிகளைப் பிடித்தது.

1995-ல் வியாழன் கிரகத்தில் ஒரு மிகப் பெரிய விண்கல் மோதியது. அப்போதும் மற்ற கிரகங்கள் பாதிப்பிற்குள்ளாகும் என்ற பயம் அலைக்கழித்தது. 1998-ல் பூமியின் மேல் வால் நட்சத்திரத்தின் துகள்கள் விழும்போது அது செயற்கைக் கோள்களை பாதிக்கும் என்று நூற்றுக்கணக்கான விண்ணில் மனிதர்களால் செலுத்தப்பட்ட செயற்கை கோள்களின் (இந்த செயற்கைக் கோள்களின் உதவியினால் பூமியிலும் கூட இன்றைக்கு தகவல் தொடர்பு மிக எளிதாகவும் விரைவாகவும் நடக்கின்றது) இறக்கைப் போன்ற நீண்ட அமைப்புகள் சுருக்கப்பட்டன.

சூரியனின் **Harmful Radiation** -த் தடுக்கும் **Magnetic Field** குறைந்து வருகிறது. ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளது. பூமியின் சுழற்சி வேகம் நாளுக்கு நாள் குறைகிறது. **Air surface** -ன் உயரம் குறைகிறது. பாலைவனங்களின் பரப்பளவு அதிகரித்து வருகிறது. கடல்-ன் பரப்பளவு குறைகிறது. வெயில் காலங்களில் அக்கினி நட்சத்திரக் கொடுமை அதிகரித்துள்ளது. (21-ம் நூற்றாண்டின் இறுதியில் பூமியின் வெப்பநிலை 5 டிகிரி கூடும் என சர்வதேச விஞ்ஞானிகள் குழு அறிவித்துள்ளனர். பிரதமர் திருமிகு. மன்மோகன்சிங் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்த அறிவியல் மாநாடு செய்தி - தினத்தந்தி 3-1-2007 முதல் பக்கம்) கடலில் புயல், கப்பல் சேதங்கள், கடல் எரிமலைகள், கடல் உயிரினங்களின் சாவுகள் அதிகரித்துள்ளன. (ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளாகி 168 பேர் உயிருடன் புதையுண்டதை பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள் ) பூமிக்கு என்னவாகுமோ என்ற பயம் உலகத் தலைவர்களையும், மக்களையும், விஞ்ஞானிகளையும் பிடித்துள்ளது. வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுகின்றன. இயேசு வாசலருகே சமீபித்துள்ளார்.

**43. அ) கர்த்தர், மனுஷன் தனியாய் இருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார். – ஆதி. 2:18**

பிரம்மச்சாரிகளை விட திருமணமானவர்கள்தாம் அதிக காலம் உயிரோடு இருக்கின்றனர் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

**ஆ) கர்த்தர்...மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி... – ஆதி 2:22**

ஆண்களின் விலா எலும்பின் எண்ணிக்கை ஒன்று குறைவாக இருப்பதாக கண்டறிந்துள்ளனர்.

**இ) அவர் ஸ்திரியை நோக்கி நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய். –ஆதி. 3.16**

கர்ப்பஸ்தீரிகளுக்கு இருக்கும் Morning Sickness, Back Pain, Labour Pain, அறுவைச் சிகிச்சைகள் இன்றும் நாம் நடைமுறைகளில் பார்க்கக்கூடிய ஒன்று.

**ஈ) ...நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்... ஆதி. 3,19**

மனிதனின் கல்லறையை, அவன் புதைக்கப்பட்டு சிலகாலம் சென்று திறந்துப் பார்த்தால், கரையானால் அரிக்கப்பட்டு மண்ணாகி இருப்பதை காணலாம்.

**உ) கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி உடுத்தினார். – ஆதி.3:21.**

பழங்கால மக்கள் தோலால் ஆன ஆடைகளை பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கான சரித்திர ஆதாரங்கள் உண்டு.

**ஊ) மனுஷன் என்றைக்கும் உயிரோடு இராதபடிக்கு செய்ய வேண்டும் என்று... – ஆதி.3.22**

மனிதனால் தொடர்ந்து என்றைக்கும் உயிர் வாழ முடியாது. முதுமையடைந்து இறப்பான் என்பது அறிவியல் உண்மை.

**எ) ஆதாம் தன் சாயலாக தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று... – ஆதி. 5.3.**

உயிரணுக்களில் உள்ள குரோமோசோம் என்ற ஒரு மரபணுவின் காரணமாக தகப்பனின் தன்மை, முகச்சாயல் மகனுக்கும் (மகளுக்கும்) தொடர்கிறது என்பதும் அறிவியல் கண்டுபிடிப்பே.

**ஏ) அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள். தேவபுத்திரர் மனுஷகுமாரத்திகளோடு கூடுகிறதால்...இவர்கள் பிள்ளைகளைப் பெற்ற போது இவர்களும்...பலவான்களானார்கள். – ஆதி. 6.3**

சமீபத்தில் **Mexico**வில் நடந்த ஒரு ஆராய்ச்சியின் போது பழங்குடி மக்களின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. அவை எல்லாமே அளவில் 8 அடிக்கு மேல் இருந்தன! மனித மண்டையோடுகளை விட அளவில் பெரிய அளவிலான மனித மண்டையோடுகளையும் விஞ்ஞானிகள் அவ்விடத்திலே கண்டுபிடித்துள்ளனர். (பரிணாமக் கொள்கைக் காரர்கள் இந்த விஷயங்களைத் தவறாகப் பயன்படுத்தியே மனிதன் விலங்கில் இருந்து வந்தான் என்கின்றனர்.)

**ஐ) மனுஷன் இருக்கப் போகிற நாட்கள் 120 வருஷம் என்றார்.**

சராசரியாக உலகில் 120 (1கோடிக்கு ஒருவர்) வயதுக்கு மேல் மனிதர்கள் உயிர் வாழ்வதில்லை என்பது அறிந்ததே.

ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகள் பூமியின் தொடக்ககாலத்தில் எழுதப்பட்ட முதல் புத்தகத்திலேயே (ஆதியாகமம்) முதல் சில அதிகாரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது!

ஆதாரம்: முத்தாரம் வார ஏடு. 30.6.1985

**- National Geography Magazine**

**44. .... அவன் (ஆதாம்) தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து, என்றைக்கும் உயிருடன் இராதபடிக்கு செய்யவேண்டும் என்று... – ஆதி. 3.22**

**... கனிதரும் ஜீவவிருட்சம் இருந்தது...அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். – வெளி. 22:2**

வேதத்தில் உள்ளபடி எப்படி ஒரு மரத்தின் கனி வயதாவதைத் தடுக்க முடியும்?

வயதாகிறதை ஆராய்ச்சி செய்கிற துறைக்கு **"Gerontology"** என்று பெயர். இப்போதுதான் இத்துறையில் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இரத்தத்தில் உள்ள **"Dhea"** என்ற பொருள்தான் வயதாகி, மூப்படைந்து மனிதன் இறப்பதற்கு காரணம். அதனால் **Vitamin E, Vitamin C, Selinium, Cludathion,** போன்றவற்றை ஆராய்ந்து மூப்படைவதை தடுக்க தேவையான மருந்தைத் தயாரிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். எல்லாவித மருத்துவத் துறைகளிலும் மருந்து தயாரிக்க இலைகள், (மூலிகைகள்) கனிகள் (விதைகள்) பயன்படுத்தப்படுவது தெரிந்ததே.

தொடர்ந்து ஆராய்ந்தால் வயதாகி இறப்பதை தவிர்த்து என்றும் உயிரோடு இருக்கலாம் என்ற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை வேதம் ஆரம்பத்திலேயே தெரிவித்துள்ளது.

**DNA** பற்றிய ஒரு ஆராய்ச்சியும், அதன் வரைபடத்தை வரைவதில் வெற்றியும்

பெற்றுள்ளது இந்த 2000மாவது ஆண்டில் மருத்துவ உலகம்! இதனால் இதுவரையில்லாத அளவில் ஏறக்குறைய எல்லா வியாதிகளுக்கும் மருந்து கண்டுபிடிக்கலாம் என்றும், பரம்பரையாக மனிதனுக்கு வருகின்ற எல்லா வியாதிகளையும் வராமல் தடுத்து விடலாம் என்றும், மனிதனின் குணநலன்களைக் கூட மாற்றி விடலாம் என்றும் சொல்கின்றனர். ஆனால் வேதத்தில் இதற்கான சாத்தியக்கூறுகளை காணமுடியவில்லை.

மனிதன் என்றும் உயிருடன் இருக்காதபடி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஞானத்தை மனிதனுக்கு இந்த கடைசிக் காலத்தில் தேவன் கொடுத்திருக்கிறார். வெற்றிபெற்றாலும் அதனால் அவனுக்கு பிரயோஜனம் இருக்காது. இயேசுவின் வருகையையொட்டி, உலகம் முடியப் போகும் இந்தக் **(III World War)** கடைசி நாட்களில் எல்லோரும் மரணத்தை சந்தித்தே ஆக வேண்டும்!

ஆதாரம்: முத்தாரம் வார ஏடு. 1.11.1985, தினத்தந்தி.

## 45. ...ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். ஆதி. 1:27

அ) **Pidarosour** என்ற ஒரு இராட்சத பறவையின் எலும்புக் கூடு டெக்சான் மாநிலத்தில் அருங்காட்சியகத்தில் உள்ளது. இந்த பறவையின் இறக்கையின் நீளம் 15.5 மீட்டர்! இது பல மில்-யன் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த எலும்புக்கூடு சிதையாமல் முழுமையாக உள்ளது. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உள்ள பறவையென்றால் உலகில் பலவிதமான இயற்கை மாற்றங்களால் அவை உருக்குலைந்து போயிருக்கும். எனவே இது சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பறவையே என்பது தெளிவாகிறது.

ஆ) 4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் மனிதன் குரங்காக இருந்தானாம். அப்போது அவனுக்கு 500 **CC** அளவு இருந்த மூளை தற்போது 1300 **CC** ஆக கூடியுள்ளதாம். இது விஞ்ஞானி **Jay Gould** -ன் கூற்று. **New Evalution Theory**-ன் படி. 4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நடந்தது கண்களால் காண முடியாது, மூளையை எடுத்து சோதனைச்சாலையில் நிரூபிக்கவும் முடியாது என்பதால் இது உண்மையல்ல, கொள்கைதான் என்பதை உணரலாம். மனிதன் குரங்கின் நிலையில் இருந்து மாற்றமடைந்திருந்தால், இன்றும் குரங்குகள் இருக்கின்றனவே (ஏகப்பட்ட இனங்களில்) அது எப்படி?

உயர்வான நிலையில் இருந்து பூமி தாழ்வான நிலைக்கு போய்க் கொண்டிருக்கும் போது **(Second Law of Thermo Dynamics)** மனித மூளை மட்டும் தாழ்ந்த நிலையில் இருந்து உயர்நிலையடைவதை விஞ்ஞானிகளாலேயே ஒப்புக் கொள்ள முடியாதே!

இ) அமீபா போன்ற (Photosovan) ஒரு **Cell** உயிரினத்தில் இருந்துதான் எல்லா உயிரினங்களும் தோன்றினவாம். கிரேக்க மொழியில் அமீபா என்றால் முதல் விலங்கு என்று அர்த்தம்! சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான உயிரினங்கள் 1 **cell** உயிரினத்தில் இருந்து உருவாகியிருக்கும் என்பதையும் **II Law of Thermodynamics** -ன்படி ஏற்றுக் கொள்ள முடியாது.

ஈ) உயிரினங்கள் தானாக உருவாகி உருமாறியிருந்தால் ஆண், பெண், என்ற இரு தன்மைகள் ஒன்று போல் எல்லா உயிரினங்களிலும் இருக்காது. ஆத்மா (நினைவுகள் உருவாகும் மூளைப் பகுதி), ஆவி (மனசாட்சி) தானாக உருவாக முடியாது. சுமார் 6000 வருடங்களுக்கு முன்பாக தேவன் அனைத்தையும் (10 லட்சம் உயிரினங்களை) உருவாக்கினார் என்பதே நூற்றுக்கு நூறு (இல்லையில்லை லட்சத்துக்கு லட்சம்!) சரி.

## 46. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும், முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும். —பிரசங்கி 1:9.

**"Voice of America"** வானொலி நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாத முதல் ஞாயிறும் **"Talk to America** என்ற நிகழ்ச்சி ஒன்று நடக்கிறது. குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுக்கு (1985ல் தொலைபேசி எண் 202 485 6303. இப்போது மாறியிருக்கலாம்.) பேசி ஒரு அமெரிக்காவைச் சேர்ந்த முக்கியஸ்தருடன் தொடர்பு கொண்டு பேசும் இந்நிகழ்ச்சியை

**Milton Preeman** என்பவர் நடத்தினார். பிரபல விஞ்ஞான எழுத்தாளரான **Issac Assimave** ஒரு முறை கலந்துக் கொண்டு பேசியபோது ஒரு முறை:

**"Time is Cyclical"** (காலம் தொடர்ச்சியாக சுழலக் கூடியது) என்ற தன் கண்டுபிடிப்பைக் கூறினார். அதாவது காலம், சக்கரம் போல சுழல்வதால் இறந்த காலம் மீண்டும் வருமாம்!

மனிதனில் இருந்து மீண்டும் குரங்கு உருவாகவில்லை. மனிதன் படிப்படியாக குரங்காக மாறவில்லை. இதிலிருந்து இறந்த காலத்தில் மனிதன் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியில் வரவில்லை என்று அறியலாம்.

**"Time is cyclical"**

அதுபோலவே இன்னொன்றையும் நிரூபிக்கலாம். முத-ல் வானமும் பூமியும் உருவாக்கப்பட்டது போல் மீண்டும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். முன்பிருந்த **Water conopy** பூமியைச் சுற்றி மீண்டும் உருவாகும். நோவா காலத்தில் பூமி நீருக்கு இரையானது போல் இனிமேல் அக்கினிக்கு இரையாகும். **Tarjan** மன்னன் காலத்தில் நடந்த சிலை வணக்க நிகழ்ச்சி மீண்டும் அந்தி கிறிஸ்துவின் காலத்தில் சம்பவிக்கும். உலகில் முன்பு வாழ்ந்த எலியா, ஏனோக்கு இருவரும் மீண்டும் தோன்றுவார்கள். (தீர்க்கதரிசிகள்).

2000 வருடங்களுக்கு முன்பு உலகிற்கு வந்த இயேசு மீண்டும் வருவார்! அல்லேலூயா!! **Time is cyclical. God is also cyclical.** காரணம் அவருக்கு தொடக்கமும் முடிவும் கிடையாது.

ஆதாரம்: முத்தாரம் வார ஏடு. 1.9.1985.

**47. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. ஆகாய விரிவு அவர் கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்கு பகல் வார்த்தையை பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சுமில்லை, வார்ததையும் இல்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்து கடைசிவரை செல்கிறது. – சங்கீதம் 19: 1–4**

**கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது. – சங். 199: 89**

வானவெளியில் உள்ள கணக்கில்லாத கோளங்கள் (பூமி, சந்திரன், சூரியன், கிரகங்கள், நட்சத்திரங்கள்...) சுழலும் போது உருவாகும் ஓசை மனித காதுகளுக்கு கேட்பதில்லை. ஆனாலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும் செல்கிறது. அந்த பயங்கரச் சத்தம் நம் காதுகளில் விழாதவாறு படைக்கப்பட்டிருக்கும் நம் காதுகள் ஒரு அற்புதமான தேவ படைப்பாகும். **FEBA Radio** என்ற வானொலி நிகழ்ச்சி ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நான்கு கண்டங்களுக்கு 15க்கு மேற்பட்ட மொழிகளில் காலையிலும் மாலையிலும் வேத வசனங்களை வானலைகள் மூலம் எடுத்துச் செல்கிறது. **"Vishwa Vani"** என்ற வானொலி நிகழ்ச்சியும் அப்படியே.

பல மொழிகளிலான கிறிஸ்தவ வேத வசன செய்திகள் பல ஊழியர்கள் மூலம் உலகம் முழுவதும் (முக்கியமாக ஆசிய நாடுகளுக்கு) நேரிடையாக **SATELLITE TV**-ல் காணத்தக்கதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல கிறிஸ்தவ ஒளிபரப்புகள் **ANGEL TV, BLESSING TV, MIRACLE NET, GOD TV** நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது.

மனிதர்கள் பேசும் போது வரும் ஒலி காற்றின் அலைகளில் அழிந்து போகாமல் அப்படியே இருக்குமாம். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக தேவன் இயேசு உலகில் சுற்றித் திரிந்த போது பேசிய வசனங்களும் அப்படியே உள்ளதாம். அதை **Fibre Optics Technology** மூலம் சேகரிக்கும் முயற்சியும் விஞ்ஞான உலகில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 48. இதைப் பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்ககாரியம் ஒன்றுண்டோ ? அது நமக்கு முன்னுள்ள பூர்வ காலங்களிலும் இருந்ததே! – பிரசங்கி 1:10

முன் நடந்ததே இப்போதும் நடக்கிறது. இனி நடக்கப் போகிறதும் முன்னமே நடந்தது. பிரசங்கி 3:15

...பூமியின் குடிகள் இருந்ததும், இராமற்போனதும், இருப்பதுமான மிருகத்தைப் ... பார்த்து ஆச்சரியப்படுவார்கள். - வெளி. 17:8

நியூட்ரான் குண்டு நவீன கண்டுபிடிப்பு அல்ல, 4000 ஆண்டுகளுக்கு முன் இறந்த ஒரு மனிதனின் எலும்புக் கூட்டில் சாதாரண அளவைவிட பலமடங்கு அதிக அளவில் கதிர் வீச்சின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக Dr. A.A. கோர்பார்ஸ்கி தன் **The Book of Hypothesis** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மகாபாரதம் என்னும் புராண நூலில் அதிக அளவு வெப்பத்தை உருவாக்கும் பிரம்மாஸ்திரம் என்ற ஆயுதம் ஒன்று இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக இவர் கூறியுள்ளார்.

ஆகாய விமானம், விண்கலன்கள், செயற்கைக் கோள்களும் நவீன கண்டுபிடிப்புகளல்ல. பறக்கும் வாகனங்களை உருவாக்கும் வழிமுறைகளை முன்னோர்கள் அறிந்திருந்தனர், இதிகாசங்கள், காப்பியங்களில் இதற்கு சான்றுகள் உண்டு. (உ.ம். புஷ்பக விமானம்) சமஸ்கிருதப் பாடலில் இருந்தும் இவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

**Robot** இப்போது உருவானதல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஒரு முனிவருக்கு சிஷ்யனாக ஒரு **Robot** பணியாற்றியதற்கான சான்றுகளும் உண்டாம். ஆனால் முன்னோர்கள் இவைகளை இரகசியமாக வைத்திருந்தனர்.

2000, 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிரமிட் (எகிப்து) சடலங்கள் **(Mummyfied)** கல்லறையில் இருந்து அழுகாமல் கிடைத்திருக்கின்றன. எகிப்தியர் சடலங்களை பாதுகாத்த முறையை விஞ்ஞானிகள் இப்போதுதான் ஆராய்ந்து வருகின்றனர்.

எகிப்தில் உள்ள ஒரு மிகப் பெரிய பிரமிடைக் கட்ட 26,00,000 பாறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதைக் கட்ட பிரமாண்டமான பளுதூக்கி இயந்திரங்கள், லாரி, டிரக், மண்வாரும் கருவிகள், ஆட்களை வேலை வாங்க இதைப்போன்ற கருவிகள் இருந்திருந்தால் மாத்திரமே சாத்தியம்!

உலகத்தை சரிசமமாகப் பிரிக்கும் மெரிடியன் கற்பனைக் கோடுகளுக்கு மேலேயே அனைத்து பிரமிடுகளும் அமைந்திருப்பது மிக ஆச்சரியமானது! இது தற்செயலாக நிகழ்ந்திருக்க முடியாது.

**Chiaphs** பிரமிட்டின் அடித்தள சதுரப் பரப்பை அதன் இரண்டு பங்கு உயரத்தால் வகுத்தால் 3.149159 வருகிறது. புகழ் பெற்ற கணித அளவான பை ( $\pi$ ) என்பதன் விரிவாக்கம்தான் இது! இந்த கணக்கை 1 நூற்றாண்டுக்கு முன்புதான் கார்க்ஹல் என்பவர் கண்டு பிடித்தார். 3,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே எகிப்தியர்களுக்கு எப்படி தெரிந்தது?!

**Hally** வால் நட்சத்திர ஆராய்ச்சியும் நவீனமானதல்ல. ஆதி காலத்திலேயே வால் நட்சத்திரங்கள் ஆராயப்பட்ட உண்மை பழைய வால் நட்சத்திர ஓவியங்களிலிருந்து தெரிய வருகிறது.

எழுத்து, அச்சுக்கலை ஆகியவற்றிலும் மனிதன் அப்போதே முன்னேறியிருந்தான்.

தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டீஸ் மலைப்பகுதியில் காணப்படும் பலப்பா என்றப் பள்ளத்தாக்கில் 37 மைல் நீளமும் 1 மைல் அகலமும் உள்ள மிகப் பண்டைக்கால சமவெளி ஒன்று உள்ளது. இது இரும்புத் தாது போன்ற பொருளால் கெட்டியாக்கப்பட்டுள்ளது. ஆகாய விமானத்தில் இருந்து இதைப் பார்த்தால் சிறந்த விமானத் தளம் போலவே உள்ளது. மலையின் மீது பறக்கும் விமானங்கள் மோதிவிடாமல் இருக்க மலைச்சரிவில் 820 அடி உயரமுள்ள திரிசூலம் போன்ற ஒரு உருவம் அமைக்கப்பட்டுள்ளது. 12 மைல் தொலைவில் இருந்து பார்த்தாலே இது தெரிகிறது.

ஹென்றி லாா்டு என்ற பிரான்ஸ் ஆராய்ச்சியாளர் சகாராப் பாலைவனத்தில் உள்ள மிகப் பழமையான டாலிஸி குகைச் சுவரை ஆராய்ந்த போது தற்கால விண்வெளி வீரரைப் போன்ற உடையோடு இருந்த மனிதச் சிற்பங்களைக் கண்டார்.

கி.பி 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த துருக்கிய கடற்படைத் தலைவர் வசம் இருந்த பழங்காலத் தேசப்படங்கள் கிடைத்துள்ளன. அதில் அண்டார்டிக் கடல் பகுதியில் இருந்த மலையுச்சிகள் குறிக்கப்பட்டிருந்தன. கி.பி. 1952ல்தான் இந்த மலையுச்சியைக் கண்டுபிடித்தார்கள்! இது எப்படி சாத்தியம்? என்று ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். காரணம் நூற்றுக்கணக்கான மைல் உயரத்தில் இருந்துப் பார்த்தால்தான் இவ்வளவு துல்லியமாகக் குறிக்க முடியும்.

மெக்சிகோ நாட்டை அடுத்த காடுகளில் உள்ள கோவில்களில் கல்லினால் ஆன இராசிச் சக்கரங்கள் உள்ளன. ஆதி காலத்திலேயே சூரிய சந்திர போக்கை அறிந்து நேரம் காட்டும் இச்சக்கரத்தை ஆச்சரியப்படும் விதத்தில் அமைத்துள்ளனர்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாயன் என்ற அமெரிக்க நாட்டு மனிதர் வீனஸ் கிரகத்தில் 584 நாட்கள் கொண்டது ஓர் ஆண்டு என்றும், பூமியில் ஓர் ஆண்டு 365.342 நாட்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இன்றைய கணக்குப்படி 365.3422. அதாவது .0002 நாள்தான் வித்தியாசம். பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வருவதாலேயே இந்த வித்தியாசம்.

சுமேரியாவுக்கும், பாபிலோனியாவுக்கும் பழைய காலத்தில் நடந்தப் போரில் டாங்கிகள், பீரங்கிகள் உபயோகிக்கப் பட்டதாக பழைய சுமேரிய கல்வெட்டுகளில் இருந்து தெரிகிறது.

பெரு-வில் உள்ள டாக்டர். சேவியர் கேப்ரைரா என்பவர் பல கற்களைச் சேகரித்திருக்கிறார். அதில் ஒரு கல் சித்திரத்தில் ஒருவன் தன் கையில் நுண்ணோக்கியை வைத்துக் கொண்டு எதையோ ஆராய்கிறான். இன்னொன்றில் இருதய மாற்று ஆப்பரேஷன் நடக்கும் காட்சி!

**"Quartz"** எனப்படும் படிகக் கற்கள் ஆயிரக் கணக்கில் பிரஞ்சு நாட்டு அட்லாண்டிக் கடல்கரையில் நிற்கிறது. இது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதில் ஆராய்ச்சியாளர்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. சூரியனில் இருந்து வரும் **"Cosmic rays"** உடன் தொடர்புக் கொண்டு அதன் சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கு இக்கற்களை **Antenna-** வாக அக்கால மக்கள் பயன்படுத்தியிருக்கின்றனர்! இதைக் கண்டுபிடித்தவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த **Rudalph Hudsor** என்ற Engineer.

ஆதாரம்: **(Germany) Erick Van Tonnikan** எழுதியது **(According to the Evidence)** இவர் வேதத்தை விவிலிய சரித்திரம் என்று குறிப்பிடுகிறார்.

மஞ்சரி மாத ஏடு, அக்டோபர் 1984

ஓம்சக்தி மாத ஏடு, நவம்பர், முத்தாரம்

**49. பெய்திருந்த பனி நீங்கிய பின், ... வனாந்திரமெங்கும் உருண்டையான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டி பொடியத்தனையாய் தரையின் மேல் கிடந்தது... மோசே அவர்களை நோக்கி இது கர்த்தர் உங்களுக்கு புசிக்கக் கொடுத்த அப்பம்...**
**– யாத்திராகமம் 16:14–15**

கர்த்தர் தன் ஜனத்தை வானாந்திரத்தில் வழிநடத்தி வரும் போது அவர்களுக்கு அதிகாலையில் பனியின் மூலம் அப்பம் கொடுத்து போஷிக்கிறார். இது எப்படி சாத்தியம்? என்ற கேள்வி ஒன்று.

1978-ல் இங்கிலாந்து தேசத்தில் உள்ள **George Sushoon** என்ற **Electronics Engineer**-ம், **Rotney Dail** என்பவரும் சேர்ந்து பழைய எகிப்திய நூல்களையும், வேதத்தையும் ஆராய்ந்து **"Munna Machine"** என்ற இயந்திரத்தை உருவாக்கினார்கள். (தற்காலத்திலுள்ள **Popcorn Maker, Coffee Maker, Chappathi Maker, Biscuit Maker, Ice cream Maker, Soda Maker etc.,** நினைவு வரலாம்.)

பாலைவனத்தில் இரவில் பெய்யும் பனித்துளிகளைக் கொண்டு ஒரு வகையான

புரதச் சத்துள்ள உணவை இந்த இயந்திரத்தின் மூலம் தயாரித்தார்கள். வனாந்திரத்தில் உணவு கிடைக்காத போது இந்த அப்பங்களை உண்டு மக்கள் நிச்சயம் 40 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்க முடியும் என்று விஞ்ஞானமும் இதனை நிரூபிக்கிறது.

ஆதாரம்: "Signs of the Gods"

மஞ்சரி - அக்டோபர் 1984 (Erick Van Tonican)

**50. ... உயிர்த்தெழுந்தார்... அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார்.**
**– மத்தேயு 28:6–7**

**... அவர் நம்மை உயிர்ப்பிப்பார்... – ஓசியா 6:2**

**... என் ஆத்துமாவை (உயிரை) பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் (சாவை) காணவொட்டீர். நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன் (உயிரோடு) – யோவான் 6:55**

**...மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், ...மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் ? – I கொரி. 15:29**

**கல்லறைகளும் திறந்து...நித்திரையடைந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது...இவர்கள் கல்லறையைவிட்டு புறப்பட்டு... அநேகருக்கு காணப்பட்டார்கள். – மத்தேயு 27: 52–53**

வேதத்தில் இறந்தவர்களை உயிரோடு எழுப்பும் சம்பவங்கள் பல உள்ளது. அநேகமாக இதை யாரும் நம்புவதில்லை.

இறந்தவர்கள் உயிர் பிழைக்க முடியும் என்ற நூலை ராபர்ட் எடின்கீர் என்பவர் எழுதியுள்ளார். நவீன மருத்துவ முறைகளின் மூலம் உடலில் உள்ள அணுக்களை அழியாமல் பாதுகாக்க முடியுமாம். கேனே என்ற இளவரசி சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்தவள். பாதுகாக்கப்பட்ட அவளின் திசு அணுக்களை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் என்று அமெரிக்காவில் உள்ள Ocklakama University மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

1935ல் ருஷியாவில் நடந்த சம்பவம் Television-ல் காண்பிக்கப்பட்டது. உறைபனியில் 2 நாய்களை உயிருடன் புதைத்து விட்டு 7 நாட்கள் கழித்து அவற்றைத் தோண்டி எடுத்து உடலை உஷ்ணப்படுத்தியதும் அவைகளின் இருதயம் வேலை செய்ய எழுந்து நடமாடத் தொடங்கியது.

இறந்தவர்களைப் புதைக்காமல், எரிக்காமல், பத்திரமாக குளிர்ப்பதன பெட்டிகளில் பாதுகாத்தால் மீண்டும் அவற்றுக்கு புதுவாழ்வு கொடுக்கும் அளவுக்கு விஞ்ஞானம் முன்னேறத்தான் போகிறது என்கிறார் இவர். பண்டைக்காலத்தில் இம்முறையை அறிந்திருந்தனர் என்பதற்கு இவர் ஆதாரமாக கிறிஸ்தவர்களின் வேதமான "The Bible" -ஐத்தான் ஆதாரமாக காட்டியிருக்கிறார்.

எகிப்திய பிரமிடுகளில் உடல்கள் அழுகாதவாறு (Mummified) முறைப்படி மக்கள் அடக்கம் செய்யப்பட்டதற்கு காரணம், என்றாவது ஒரு நாள் அவைகள் உயிரோடு எழும்பும் என்பதாலேயே!

**51. தேவக்குமாரர் மனுஷகுமாரத்திகளுடன் கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள். – ஆதியாகமம் 6:3**

Lenda என்ற Spanish பாதிரியார் அமெரிக்க காடுகளில் மறைந்துக் கிடந்த மாயன் நகர பழைய சித்திர எழுத்துக்களுக்கு விளக்கம் கண்டார். குக்குல்கன் என்ற ஒரு அதிசய

மனிதன் அங்கு வந்தானாம். ஆழ்கடலில் அவனைத் தள்ளியும் அவன் உடனே மேலேறி வந்ததால் மக்கள் ஆச்சரியப்பட்டு அவனை தெய்வமாக்கி விட்டார்களாம்!

தென் அமெரிக்காவில் **Diaheevan** என்ற இடத்தில் வழவழப்பான ஒரு பாறையில் பறக்கும் மனிதர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. **Saldia**-ல் கண்டுபிடித்த தங்கப்பாளங்களிலும் இறக்கைகளைக் கொண்ட மனித உருவங்கள் காணப்படுகின்றன.

**Homer** என்ற ஆதி கிரேக்க கவிஞர் தனது காவியத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். Ithaga நாட்டு அரசன் தன் கப்பல் சேதமடைந்ததால் தன் பரிவாரங்களுடன் சிசி- தீவுக்கரையில் ஒதுங்குகிறான். அந்தத் தீவில் ஒற்றைக் கண் அரக்கர் கூட்டம் (இராட்சதர்கள்) வாழ்ந்தார்களாம். Palibeemus என்ற அரக்க மன்னன் அந்த பயணிகளைப் பிடித்து ஒரு குகையில் அடைத்து கல்லால் திறக்க முடியாதபடி மூடிவிட்டானாம்.

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த ஒரு மனிதனின் இரண்டடி நீளக் காலடித் தடங்கள் கிடைத்துள்ளன. "ManTrack" என்ற தலைப்பில் அந்த படத்தை ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.

மெக்சிகோ நாட்டு புதைப் பொருள் ஆராய்ச்சியில் 8, 9 அடி உயரமுள்ள மனித எலும்புக்கூடுகள் பல கிடைத்துள்ளன.

தூத்துக்குடி அருகாமையில் உள்ள முக்காணி என்ற ஊரில் சுமார் 40 அடி அளவிலான மனிதன் ஒருவனின் கல்லறை ஒன்றை கட்டி வைத்துள்ளதை இன்றைக்கும் காணலாம்.

தற்காலத்தில் எழுதப்படும் பல மாயாஜால கதைகளும் இதனடிப்படையில் எழுந்த கற்பனையில் உதித்ததுதான்.

தேவக்குமாரர்கள் (தேவதூதர்கள், அதாவது பாவம் செய்து சாத்தானாக மாறி உலகத்தில் தள்ளப்பட்ட லூசிபர் என்ற தூதனின் கெட்ட ஆவிகள்) பலர் உலகத்தில் உள்ள மக்களில் பல அழகிய பெண்களைச் சேர்ந்து குழந்தைகளைப் பெற்ற போது அவைகள் பிசாசாக பல உருவங்களில் பிறந்துள்ளன. அவற்றையெல்லாம் மக்கள் தெய்வங்களாக்கிவிட்டார்கள் அறியாமையினால்!

ஆதாரம்: Chariot of the Gods

Signs of the Gods

**52. ...சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்... அதன் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. (சங்கீதம் 19:5-6)**

**சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.**

**- சங். 136:8**

6000 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தைக் கொண்ட சூரியன் 25 நாட்களுக்கொரு முறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும்போது **6.1 X 1022 Erk.** அளவுடைய **Violet colour "Electro Magnetic wave"**-ஐ வாரி இறைக்கிறது. சூரியனின் உட்பகுதியில் சுமார் 2,00,00,000 வெப்ப மையங்கள் உள்ளன.

சூரியன் உள் வட்டத்துக்கு **"Photospeare"** என்று பெயர். அடுத்தது **"Reversing layer"** 150 கி.மீ. வரை பரவியுள்ளது. அடுத்தது 1,500 கி.மீ பரவியுள்ள **"Gromospheare"** பிறகு **"Karono"** என்ற வெளி சூழ்ந்துள்ளது. இந்த 4 அடுக்குகளுக்கும் ஒன்றுக் கொண்று தொடர்பு இல்லை.

சூரியனின் மேற்பரப்பில் 0.2%க்கு ஒரு **"Sunspart"** உள்ளது. இது **"Ampra"**, **"Penampra"** என்று 2 பகுதிகளாக **"Titaniam Acid"** -டன் 3000டிகிரி செ.கி.க்கு குறைவாக உள்ளது. **"Karona"** சுருங்கி விரிவடையும் தன்மையுடையது என்று 1715, 1979 ஆண்டு சோதனைகளில் தெரிந்தது.

சூரியனிடமிருந்து வரும் வெப்பக் கதிர்கள் **(Ultra Violet Rays)** ஆக்சிஜன் மீது படுவதால் பூமியைச் சுற்றி **"Ozone"** என்னும் வாயுப் பகுதி அமைந்துள்ளது. மேலும் இக்கதிர்கள் பூமியின் காந்தத் துருவத்தால் கவரப்பட்டு **"Arraro Poriosiss"** என்ற ஒளித் தோற்றங்களை ஏற்படுத்துகின்றது.

சூரிய வெப்ப சேகரிப்பு மூலம் நாம் 600 டிகிரி செ.கி. வெப்பம் பெற முடியும். சூரிய சக்தியால் **"Halley Comet"** 1910க்குப் பிறகு சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதாம்.

சூரியன் இல்லாவிட்டால் ஒன்றுமில்லை என்று விஞ்ஞான உலகம் கூறுகிறது. செடியின் **Clorophil** சூரிய ஒளியில்தான் **Carbon-di-Oxide**-ஐ அங்க சேர்மங்களாக்கி **(Photo synthesis)** செடியை வளரச் செய்கிறது. செடிகள் தயாரிக்கும் **enzymes (catalysts)**-க்கு தேவையான ஆற்றலைத்தான் சூரியன் தருகிறது. தாவரங்கள்தான் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் முக்கிய உணவு. அதனால் சூரியன் இல்லாவிட்டால் உயிரினங்களுக்கு உணவே இல்லை எனலாம்!

1977ல் சூரியனின் மேற்பரப்பின் வெப்பநிலை 6 டிகிரி செ.கி. குறைந்ததாக **Arisona District "Kitt Peak"** நிலையத்தினர் பதிவு செய்தனர். இப்போது இன்னும் குறைந்திருக்கும். இது 0.1%தான். 2% குறைந்தால் பூமி முழுவதும் பனிக் கட்டியாக உறைந்து விடும் என்று **William. C. Livingston** என்ற விஞ்ஞானி அறிவித்தார். ஆண்டுக்கொரு முறை தோன்றும் **Sunspots** இந்த வெப்பநிலையைக் குறையச் செய்கிறது. 1977க்குப் பிறகு சூரியனின் ஒளி குறையத் தொடங்கியிருப்பதால் **Ultra-Violet rays, X'rays** பூமியைத் தாக்கி வருகின்றன. **Ozone** படலத்தில் ஓட்டை விழுந்து விட்டதால் பாதிப்பு அதிகமாகி வியாதிகளும் சேதங்களும் அதிகரித்து வருகின்றன.

மற்ற நட்சத்திரங்களை விட தேவன் சூரியனுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் தருகிறார் என்பதை இதிலிருந்து புரிந்துக் கொள்ளலாம்.

ஆதாரம்: காலைக்கதிர் மாத ஏடு -பெப்ரவரி 1983
இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ்
மஞ்சரி மாத ஏடு

## 53. அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கியது... – யோபு 26:13

**இராசிகளை அதினதின் காலத்தில் வரப்பண்ணுவாயோ? ...வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியை ஆளும் ஆளுகையை நீ திட்டம் பண்ணுவாயோ? – யோபு 38: 32-33**

**Halley Comet** முதன்முத-ல் கி.மு. 240ல் சீனர்களால் காணப்பெற்று 18ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த **Edward Halley** என்பவரால் பெயரிடப்பட்டது.

இவர் இந்த வால் நட்சத்திரம் சரியாக 76 வருடங்களுக்கு ஒரு முறைத் தோன்றும் என்று கணித்தார். அப்படியே கி.பி 1531, 17-7-1682ல் தோன்றியது. ஆனால் 1682ல் தோன்றிய பின் 75 ஆண்டு கழித்து தோன்றி விட்டது! ஏன் இந்த ஓராண்டு முரண்பாடு? இதற்கு **Hally** "பெரிய அளவுள்ள ஜுபீடர் கிரகம் இந்த வால் நட்சத்திரத்தை தன்னை நோக்கி இழுத்ததால் சுழல் பாதை நீட்சி காரணமாக இவ்வாறு நேர்ந்திருக்கலாம்" என்று கணித்தார்.

1742ல் **Halley** இறந்த பின் அவர் கூறியபடி 1758ல் இந்த வால் நட்சத்திரத்தை எதிர் பார்த்தனர். ஆராய்ச்சியாளர்களுக்குத் தென்படாத இந்த நட்சத்திரம் **"Pallydsk"** என்ற விவசாயிக்கு முதலில் தெரிந்து 1 மாதத்திற்கு பிறகு தான் விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரிந்ததாம்.

பிறகு 1835, 1910, 1986-ல் இது தென்படுவது சரியாக கணிக்கப்பட்டது. பல வால்நட்சத்திரங்கள் போக்குவரத்தை கணக்கிடவே முடியவில்லை. போனது போனதுதான், திரும்ப வர பல லட்சம் ஆண்டுகளாகலாம் என்கிறார்கள். நட்சத்திரங்களை அதினதின் காலத்தில் வரப்பண்ண மனிதனால் முடியாது.

ஆதாரம்: மஞ்சரி (பெப்.86)

## 54. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமல் போனான். – ஆதி. 5:24

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை(இயேசுவை) எடுத்துக் கொண்டது.

இப்படி காணாமல் போகும் சம்பவம் இப்போதும் நடைபெறுகின்றன. 1975ல் கிறிஸ்டன் என்பவர் தன் கணவர் ஆலன் ஜாண்சனுடன் துருவப் பிரதேசத்தில் நடந்துக் கொண்டிருக்கும்போது, பின்னால் புகைப்படம் எடுத்தபடி வந்துக் கொண்டிருந்த தன் கணவர் திடீரென்று காணாமல் போய் விட்டதைக் கண்டு திகைத்தாள். ஒரு மோப்ப நாயுடன் சென்று ஆராய்ந்தபோது நாய்கள் ஜாண்சன் கடைசியாக நின்ற இடத்தில் நின்றபடி மேற்கொண்டு நகராமல் வானைப் பார்த்துக் குலைத்தன.

டேவிட் லாங், என்ற விவசாயி தானியப் போருக்கு பக்கமாக 150 கெஜ தூரம் வந்திருக்கும் போது திடீரென்று மறைந்து விட்டார். அதைக் கண்ணால் கண்ட அவரின் மகன்கள் 3 பேரும் கண்டதைக் கூற முடியாத அளவுக்கு அதிர்ச்சி அடைந்தனர். இது **U.S.A.**-ல் டான்சி மாநிலத்தில் **"Kalladin"** கிராமத்தில் கி.பி. 1880, செப்.23-ல் நடுப்பகல்-ல் நடந்தது! அவர் மாயமாக மறைந்த இடத்தில் 15 சதுர கி.மீ. வரை உள்ள புல்வெளி மஞ்சளாக மாறியிருந்ததாம். (சமீபத்திய ஆதாரம்: தினத்தந்தி சிறுவர் தங்கமலர் 18.8.2000 பக்கம். 3)

1920-ல் லண்டனில் **Bar** ஒன்றிலிருந்து வெளியே வந்த **Cresen** என்பவர் சாலையில் வருவோர் போவோரைப் பார்த்தபடி நடந்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று காணாமல் போய் விட்டார்.

1953 ஜுலை 13ம் தேதி யார்க்ஷயரில் உள்ள பிரெட்போஸ்ட் நகரின் பாதிரியார் போர்னிஷ் என்பவர் யாருக்கோ போலந்து மொழியில் தொலைபேசியில் பேசிவிட்டு, வீட்டைவிட்டு புறப்பட்டார். பரந்த புல்வெளியின் 250 கெஜ தொலைவு திருப்பத்தில் காணாமல் போய்விட்டார்.

கி.பி. 1933-ல் சீனா-ஜப்பான் போரின் போது **Nansingh** நகரில் 3,000 சீனப் போர் வீரர்கள் திடீரென்று சேர்ந்தாற்போல் காணாமல் போய் விட்டனர். **Wireless** மூலம் செய்தி வராததால் தலைமையகத்தில் அதிகாரிகள் விரைந்து சென்று பார்க்கும்போது இரண்டே இரண்டு பேரைத் தவிர அனைவரும் காற்றில் கரைந்து விட்டது தெரியவந்தது.

இதே போன்று 4,000 **Spanish** போர் வீரர்களுக்கும் ஏற்பட்டது. நீரூற்றின் அருகே இறங்கி விட்டு பிறகு செல்லும்போது காணாமல் போய்விட்டார்கள்.

கி.பி. 1872ல் ஜுன் மாதம் **"Iron Mountain"** என்ற நீராவிக் கப்பல் 55 பயணிகளுடன் கடலில் வந்துக் கொண்டிருக்கும்போது கடலில் கலக்கும் ஒரு நதியருகே மறைந்தனர்.

மேற்கூறிய மர்மம் இதுவரை விஞ்ஞானிகளுக்கும் புரியவில்லை.

ஆதாரம்: காதாம்பினி (ஹிந்தி)

தினத்தந்தி, சிறுவர் தங்கமலர் 18.8.2000 பக்கம். 3

## 55. ... நாம் மண்ணென்று நினைவுகூறுகிறார்... – சங். 103:14

## ...மனுஷன் மண்ணி–ருந்து உண்டான மண்ணானவன். – 1கொரி. 16.47

## ...மண்ணானது (சரீரம்) தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி. (பிர. 12:7)

மனித உடல் 10 ரூபாய்க்கும் குறைவான மதிப்புள்ளது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். 10 ரூபாய் என்பதே அதிகம் தான், காரணம் மனிதனின் உடல் வெறும் மண்ணினால் ஆனதுதானே. மனித உடல் சுண்ணாம்புச் சத்து, உப்புச் சத்து, கந்தகம், கரி, தண்ணீர் முதலியவற்றால் ஆனது. (இவையெல்லாம்தான் மண்ணிலும் இருக்கிறது.) வயது ஆக ஆக இதன் இரசாயன மதிப்பு குறைந்து வருகிறது.

இறந்த பின் உடலை எரித்தால் கிடைக்கும் சாம்பலை யாரும் 25 பைசா கொடுத்துக் கூட வாங்க மாட்டார்கள்.

ஆதாரம்: **Mirror (April '75)**

## 56. கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும். – சங்கீதம் 104:31

இயேசுவின் வருகையை அறிவித்த யோவான் ஸ்நானகனின் பிறந்த இடமாகிய Ain Karimp Hadasa Medical College கட்டப்பட்டுள்ளது. இயேசு தன் சீஷர்களை இளைப்பாறச் சொன்ன இடத்தில் "Kethsemani" என்ற குகை உள்ளது. இயேசுவை தனியே விட்டுவிட்டு சீஷர்கள் உறங்கிய இடத்தில் ஒரு பெரிய ஒ-வ மரம் உள்ளது.

இயேசுவை லாசரின் சகோதரிகள் சந்தித்த Bethpaghe என்ற இடத்தில் "Prancisscan church" உள்ளது. இயேசு தன் சீஷர்களுக்கு எருசலேமின் அழிவைப் பற்றி கூறிய இடத்தில் "Father Nosther" என்ற ஆலயத்தை பி.பி. 333-ல் Helona-ஆல் கட்டப்பட்டது. அருகே Eliyona Church-ம் உள்ளது.

இயேசுவை சிறை வைத்து துன்புறுத்திய இடத்தில் அராபியர்களின் "Al Omaria College" இருக்கிறது. சிலுவைத் தூக்கிச் சென்ற பாதையை மூன்றாம் ஸ்தலம் என்கிறார்கள். இயேசு இரண்டாம் முறையாக சிலுவைத் தூக்கிச் செல்லும் போது கீழே விழுந்த இடத்தில் Pransiscan சபையினரின் இரு ஆலயங்கள் உள்ளன. இயேசுவைப் பார்த்து பெண்கள் அழுத இடம் "Ell-Enha" என்ற வீதியாகும்.

இயேசுவின் சிலுவை நடப்பட்ட குழி தகடுகளால் வேயப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவின் கைகால்களில் ஆணியறைந்த இடத்தில் மொசைக் சித்திரங்கள் காணப்படுகின்றன.

இயேசு உயிர்த்து மகதேலேனா மரியாளுக்கு காட்சியளித்த இடத்தில் "Magathalana Church" உள்ளது. இயேசுவை கட்டிவைத்து அடித்த இடத்தில் ஒரு சிவப்பு தூண் காணப்படுகிறது. அருகில் "Chapel of the Mocking" உள்ளது.

5 கி.மீ தூரத்தில் லாசரு வாழ்ந்த அசரியா என்ற சிறு கிராமம் உள்ளது. இயேசுவை சாத்தான் சோதித்த மலை "Mount of Temptation"-ம் உள்ளது.

சோதோம் கோமோராவை சபித்த இடத்தில் சாக்கடலில் கந்தகமும் உப்பும் அதிகம் நிறைந்துக் காணப்படுகிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்ற யோர்தான் நதியும் உள்ளது.

இயேசுவை 2ம் முறை சாத்தான் சோதித்த இடம் "Kanisa Mirrium" என்ற Church -க்கருகில் உள்ளது. இயேசு ஓசன்னா ஒலியுடன் எருசலேமுக்குள் நுழைந்த Golden Gate இன்றும் உள்ளது. பேதுரு சப்பாணிப் பிச்சைக்காரனை குணமாக்கியதும் இங்கேதான்.

ஆபிரகாம் ஈசாக்கை பலிகொடுக்கத் துணிந்த பாறை ஒன்று உள்ளது. சாலமோன் பலி கொடுக்க அமைத்த பீடமும் உள்ளது.

இயேசுவின் கடைசி திருவிருந்து நடந்த இடம் பாழடைந்து காணப்படுகிறது. எலிசபெத்தும், மரியாளும் பயன்படுத்திய கிணற்றில் 2,000 வருடங்கள் ஆகியும் இன்றும் நீர் கிடைக்கிறது. இயேசு, 2 மீன், 5 அப்பத்தால் மக்கள் பசியாற்றிய இடத்தை "Ayn green" என்கிறார்கள்.

நிறைமாத கர்ப்பிணி மரியாள் தங்கி இளைப்பாறிய இடத்தில் ஒரு ஆலயம் உள்ளது. இயேசு பிறந்த இடத்தில் வெற்றி நட்சத்திர அலங்காரம் காணப்படுகிறது.

இயேசு சமாரிய ஸ்திரீயுடன் பேசிய கிணற்றைச் சுற்றி ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இதிலிருந்து 175 கெஜ தூரத்தில் யோசேப்பு கல்லறை (இயேசுவின் தந்தை) காணப்படுகிறது. 650 கெஜ தூர Cigaar கிராமத்தில்தான் அந்த சமாரியப் பெண வாழ்ந்தாளாம்.

இயேசு மறுரூபமான தாபோத் மலையும் உள்ளது. ஏரிக் கடலோரத்தில் "Balbourt fishes" அதிகம் உள்ளது (வாயிலிருந்து நாணயம் எடுக்கப்பட்ட மீன்தான்) இயேசு 2ம் முறை அப்பத்தை அதிகப்படுத்திய இடம் சுனைகள் சூழ்ந்த Elldupha சமவெளி. அங்கே தான் மலைப்பிரசங்கம் செய்தார்.

எலியா தீர்க்கத்தரிசி வாழ்ந்த கார்மேல் மலை உள்ளது. இயேசு உயிர்த்தெழுந்த

பின் அப்பம் பிட்ட இடத்தில் (எம்மாவு) ஒரு ஆலயம் உள்ளது. (வேதத்தில் உள்ள சம்பவங்கள் எதுவும் கற்பனை அல்ல. கற்பனையான இடங்களில் நடந்தவைகளும் அல்ல.)

ஆதாரம்: பாலஸ்தீன பயணம் (வானதி பதிப்பகம்)

தமிழாக்கம், சுருக்கம் - நடனு. - மஞ்சரி மே. 1976.

**57. தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். – ஆதி. 2:7**

**உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியி–றங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? – பிரசங்கி 3:21**

**...ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்... – பிரசங்கி 12:7**

இதய மாற்று ஆப்பரேஷன், சிறுநீரக மாற்று ஆப்பரேஷன், கண்மாற்று ஆப்பரேஷன் etc., இப்படி அனைத்தும் மருத்துவத்தில் சாத்தியம். ஆனால் மூளைமாற்று ஆப்பரேஷன் மட்டும் விஞ்ஞானத்தில் சாத்தியமில்லை. காரணம் மூளையை ஒருவரிடமிருந்து எடுத்த உடனேயே அது இயக்கமில்லாமல் போய் விடுகிறது.

ஒருவனுடைய மூளையின் இயக்கம் நின்று விட்டாலே அவன் மரணம் அடைந்து விட்டதாக **(Clinically Dead)** என்று அறிவித்துவிடலாம் என்று **"World Health Organisation"** அறிவித்துள்ளது. இதய இயக்கம் இருப்பதால் அவன் உயிருடன் இருப்பதாக அர்த்தம் இல்லை! காரணம் அடிபட்ட மூளை முற்றாக அடிபடாத காரணத்தினால் இருதயம் இயங்குவதற்கான உணர்வு அலைகளைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கும். அதனால் இதயம் துடித்துக் கொண்டிருக்கும். மற்ற அவயவங்களில் அசைவு இருக்காது. மூச்சு விடக் கூட அந்த உடலால் முடியாது. அதையும் நாம் தான் உருவாக்க வேண்டும்.

40 வருட ஆராய்ச்சிக்குப் பிறகும் மூளையைப் பற்றி நன்கு கற்றுணர முடியவில்லை என்று **Dr. P. Ramamurthy** கூறுகிறார்.

மூளை இயங்காமல் இருந்தாலே அவனுக்கு மரணம் சம்பவித்து விட்டது என்றுதான் அர்த்தம். காரணம் மூளையுடன் இணைந்திருக்கும் ஆத்மா, ஆவி (தேவன் தந்தது) வெளியேறிவிடுவதால் மனிதன் பிறகு நடமாடுவது முடியாத காரியம். மனித மூளையில் உள்ள அறிவு, சிந்தனை செய்கிற பகுதியில் தேவன் தந்த ஆத்மாவும் இணைந்திருப்பதால் தான் மூளையை எடுத்து மற்றவர்களுக்கு பொருத்த முடிவதில்லை.

அப்படியே பொருத்துவதாக வைத்துக் கொண்டாலும் அந்த ஆப்பரேஷன் வெற்றியடைந்தாலும் விபரீதங்கள்தான் ஏற்படும். எப்படி? உதாரணமாக இறந்து போன **Mr. X** என்பவருடைய மூளையை உயிரோடிருக்கும் **Mr. Y** என்பவருக்குப் பொருத்துவதாக வைத்துக் கொள்வோம். இப்போது புதிய மூளையுடன் உயிருடன் இருப்பது **Mr. Y** அல்ல, அது **Mr. X** தான்! காரணம் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் அவன் மூளையில் அடக்கம். (அதனால்தான் தாயின் வயிற்றில் கருவில் முதன்முதலில் மூளைதான் உருவாகிறது) **Mr. X** -ன் வாழ்க்கை **Mr. Y** வாழ்க்கையாகி, **Mr. X** செய்த புண்ணியங்களுக்கு பலன் **Mr. Y**க்கும், **Mr. X** செய்த பாவங்களுக்கு தண்டனை Mr. Yக்கும் போய்ச் சேரும். அது எப்படி சரியாகும்? அதனால்தான் தேவன் இந்த ஆப்பரேஷன்களை நடக்க விடுவதில்லை!!

ஆனால் மிருகங்களின் மூளையில் தேவன் ஆவியைத் தராததால் மிருகங்களுக்கு மூளை மாற்று ஆப்பரேஷன் சாத்தியமே! மூளைமாற்று ஆப்பரேஷனுக்கு பிறகு ஒரு குரங்கு 3 நாட்கள் உயிருடன் இருந்ததாம்.

மூளையில் இணைக்கப்பட்டிருக்கும் ஆவியை பரிணாமத்தை நம்பும் விஞ்ஞானிகள் எத்தனை வருடம் ஆராய்ந்தாலும் அறிந்துக் கொள்ள முடியாது.

ஆதாரம்: **(Madras Radio Station)**

கலந்துரையாடல் **Dr. Ramamurthy** (செய்திமடல்)

**58. உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டகசாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும், யுத்தமும் வருங்காலத்திலும் பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்திருக்கிறேன். – யோபு 38: 22,23**

முதலாம் உலக யுத்தம் நடந்துக் கொண்டிருக்கும் சமயம், இங்கிலாந்துக்கும் ஜெர்மன் நாட்டிற்கும் போர் நடந்துக் கொண்டிருந்தது. கப்ப-ல் வெடி மருந்துகளுடன் ஜெர்மன் நாட்டிற்கு இங்கிலாந்து இராணுவத்தினர் சென்றுக் கொண்டிருந்தனர். வெடிமருந்துகள் சீதோஷ்ண நிலை காரணமாக பூசனம் பிடித்துக் கெட்டது.

படைத்தலைவன் வெடிமருந்துகளைப் பாதுகாக்க தகுந்த ஆலோசனை கூறுபவர்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என்று செய்தித் தாளில் விளம்பரம் கொடுத்தான். **Dr. Wiseman** என்ற ஒரு யூதர் வேதத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள யோபு 38:23 வசனத்தை வாசித்து பனிக்கட்டிகளுக்குள் வெடிமருந்துகளை வைத்துப் பாதுகாக்கலாம் என்று படைத்தலைவனுக்கு ஆலோசனை கொடுத்தார்.

அவ்விதம் சில வெடி மருந்துகளை 3, 4 நாட்கள் பரிசோதனை செய்து அவை கெடாமல் இருந்ததால் அந்த முறையை பின்பற்றி முழு வெடிமருந்துகளையும் தொடர்ந்து பனிக்கட்டிகளால் பாதுகாத்தனர்.

பனிக்கட்டிக்குள் பொருட்களை வைத்தால் கெடாது என்ற கண்டுபிடிப்பின் அடிப்படையில்தான் இன்றைய குளிர்சாதனப் பெட்டி **(Refrigerator, Freezer)** போன்ற கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. காற்றுப் பட்டாலே நமத்துப் போகும் பிஸ்கட்டுகள், மிக்ஸர், முறுக்கு போன்றவைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் நமத்துப் போகாமல் எப்போதும் மொறு மொறுப்பாக இருக்கும். (உங்கள் வீட்டில் குளிர்சாதனப் பெட்டியில் பிஸ்கட்டுகள், மிக்ஸர், முறுக்கு போன்றவைகளை வைத்துப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையென்றால் வைத்து சோதித்துப் பார்க்கவும். ஏனென்றால் நாங்களே பலகாலமாக பிஸ்கட்டுகள், மிக்ஸர், முறுக்கு போன்றவைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் நமத்துப் போகும் என்று தான் நினைத்திருந்தோம்)

ஆதாரம்: வானவில் - சாதுசெல்லப்பா.

**59. ... பிடித்து இழுக்க நாய்களும்...வரக் கட்டளையிடுவேன். –எரே. 15.3**

**...தன் கைகளை தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால்... – லேவி 15.11**

**... 25 வயது முதல்... யாவரும்... பணிவிடைச் செய்யும் சேனையில் சேவிக்க வரவேண்டும். 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்யாமல் திருப்பணி சேனையை விட்டு விலகி... – எண். 8.24**

**இரதங்கள் வீதிகளில் கடகடவென்றோடி வீதிகளில் இடதுசாரி, வலதுசாரி வரும். அவைகள் தீவட்டிகளைப் போல விளங்கி, மின்னல்களைப் போல வேகமாகப் பறக்கும். – நாகூம் 2:4**

**இரும்பு மண்ணி–ருந்து எடுக்கப்படும், செம்பு கற்களில் உருக்கி... மனிதன்...கற்களை கடையாந்தரம் மட்டும் ஆராய்ந்து தேடி, இருளுக்கும் அங்கே முடிவுண்டாக்குகிறான்... அதின் கல்லுகளில் இந்திரநீலம் விளையும்...ஒரு துளியும் கசியாதபடி ஆறுகளை அடைக்கிறான்... கன்மலைக்களுக்குள்ளும் நீர்க்கால்களை**

வெட்டுகிறான். – யோபு 28

அ) John Knocks என்பவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஒரு காவல்துறை அதிகாரி. நாட்டில் அதிகம் திருட்டு வேலைகள் நடைபெறுவதாக செய்தித் தாள்களில் செய்திகள் அதிகமாக வந்துக் கொண்டிருந்தது. அதிகக் கவலைக் கொண்ட இவர் எரேமியா 15:3-ஐ வாசித்து அதன் படி செய்து பார்க்க முடிவு செய்தார். பிடித்திழுக்க நாய்களை... என்ற வார்த்தைகள் அவர் கவனத்தை கவர்ந்தது.

திருடர்களின் தடயங்களை கைக்குட்டைகளில் துடைத்து அதை நன்கு பழக்குவிக்கப்பட்ட நாய்களின் மூக்கில் கட்டி அனுப்பினார். அவர் எதிர்பார்த்தது போலவே நாய்கள், திருடனை பிடித்து இழுத்து வந்தன. இன்று காவல்துறையில் இருக்கும் போலீஸ் மோப்ப நாய் முறை கூட அன்றே வேதத்தில் சொல்லப்பட்டதுதான்.

ஆ) மருத்துவமனைகளில் மருத்துவர்கள் ஒரு நோயாளியைப் பரிசோதித்து விட்டு அடுத்த நோயாளியைத் தொடுவதற்கு முன் கைகளைக் கழுவும் முறையைக் கண்டு பிடித்ததும் லேவியராகமம் 15-ம் அதிகாரத்தில் இருந்துதான்.

இ) பத்திரம் எழுதும் போது அதில் முத்திரைக் குத்தி, 2 பேர் சாட்சி கையெழுத்திடும் முறையை உலகுக்கு அறிவித்ததும் நமது வேதம் தான். (எரேமியா)

ஈ) உலகமெங்கும் இப்போது வேலையில்லாத் திண்டாட்டம். காரணம் வேத அறிவு இல்லாததுதான். எண். 8:24-25 வசனத்தின்படி 25 வயதில் வேலையில் அமர்ந்து 50 வயதில் ஒவ்வொருவரும் பதவி விலகினால் வேலையில்லாத் திண்டாட்டமே உலகில் இருக்காது.

உ) கி.மு. 650ல் வாழ்ந்த நாகூம் தீர்க்கதரிசி வேதத்தில் நாகூம் 2:4-ல் தற்கால வாகனங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. (Bus, Lorry, Van, Car, Scooter, Bi-cycle, Auto etc.,) அவைகளின் இரைச்சல் பற்றியும், பெரிய வீதிகள் இரண்டாக கோடிடப்பட்டு பிரிக்கப்பட்டு, வாகனங்கள் இடதுசாரி, வலதுசாரியாக வரும் முறையும், இரவில் விளக்கு வெளிச்சம் உமிழ்ந்தபடி வரும் அழகு பற்றியும், அவற்றின் அதிகபட்ச வேகம் பற்றியும் தெள்ளத் தெளிவாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஊ) இரும்பு மண்ணில் இருந்து எடுக்கப்படும் முறை கி.மு. 4000ல் எழுதப்பட்ட யோபு புத்தகத்தில் உள்ளது. அது போல் செம்பு கற்களில் இருந்து உருக்கி எடுக்கப்படும். 28:6ல் பூமிக்கடியில் கிடைக்கும் நவரத்தினங்கள் பற்றிய வெளிப்பாடுகள் உள்ளன.

எ) யோபு 28:3ல் இன்றைய சுரங்கப்பாதைகளின் தீர்க்கதரிசனம்! (தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு சுரங்கப் பாதையின் நீளம் 3 கி.மீ) குடைவுக் கிணறுகள் 7.5.கி.மீ வரைகூட வெட்டப்படுகின்றன.

ஏ) யோபு 28:10,11ல் இன்றைக்கு கட்டப்படும் நீர் அணைகள் (Dam) பற்றியும், மலைக் குகைகள், வாய்க்கால்கள் பற்றியும் கூறப்படுகிறது. மேற்கண்ட வசன ஒப்புமை அதிசயம் தானே.

ஆதாரம்: வானவில், சகோ. சாது செல்லப்பா.

**60. அது (உலகிலுள்ள யாவரும்)...தங்கள் வலது கையிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கு, அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதன் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடி செய்தது...அந்த மிருகத்தின் இலக்கத்தை புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன்...அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு (666).**
**– வெளி. 13: 16–18**

உலக மக்கள் அனைவருடைய கணக்கு வழக்குகளையும் மையப்படுத்தக்கூடிய (Centralised) நாணய முறைக்கு தேவையான காரியங்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன. உலக நாணய நிதி (International Monetary) 1969ம் ஆண்டு மார்ச் 31ம் தேதியிலிருந்து

(Special Drawing Rights) என்ற முறை கொண்டு வந்துள்ளது. இம்முறையில்தான் (I.M.F)ன் கணக்குகள் உள்ளன. இதிலிருந்து இந்தியா வாங்கியுள்ள கடனும் (SDR) என்ற அளவிலேயே உள்ளது.

தற்போது உலக முழுவதிலும் செல்லுபடியாகக் கூடிய (EURO MONEY) அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது பற்றி தாங்கள் அறிந்திருக்கலாம். 3-ம் உலக யுத்தத்திற்குப் பிறகு உலகத் தலைவனாகப் போகும் அந்தி கிறிஸ்து, மக்கள் வாங்குவதை - விற்பதை கண்காணிக்கக் கூடிய அதிகாரத்தைப் பெறுவான். இவனை வேதம் மிருகம் என்றழைக்கிறது.

விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கும் (Light Amplification by Stimulated Emission of Radiation (LASER) ஒளிக்கற்றை மூலம் தோலுக்கடியில் வெளியே தெரியாத மாதிரி ஒரு இலக்கத்தை மனித சரீரத்தில் பொறிக்க முடியும். (தினமணி 26.6.1982).

(உ.ம். திருப்பதி செல்லும் சென்னைவாசிகள், சென்னையிலே உள்ள ஒருவகைக் கணிப்பொறியில் தங்கள் கைகளில் (LASER) ஒளிக்கற்றை மூலம் வரிசை எண் பதியப் பெற்று திருப்பதியில் உள்ள கணிப்பொறி ஸ்கேனர் மூலம் முன் அனுமதி பெற வசதி செய்யப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.)

இதன் மூலம் முத்திரை பொறித்தவர்களையும், பொறிக்காதவர்களையும் எளிதாக அந்திகிறிஸ்து அடையாளம் கண்டு கொள்வானாம்.

உலக மக்கள் எல்லோருடைய கணக்கையும் மையப்படுத்தும் ஒரு தனிக்குறி (Identification)-ஐ, இலக்கமாக LASER ஒளிக்கற்றையால் எழுத தீர்மானித்துள்ளனர். உலகில் பலவிதமான மொழிகள் இருப்பதால் எல்லோருக்கும் பொதுவான மொழி ஒன்று இருக்குமானால் அது ROMAN LETTERS & NUMERCIAL எண்கள்தான்! COMPUTER-கள் கூட 1, 0 என்ற பைனரி எண்கள் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டு செயல்படுகிறது. உலகிலுள்ள அனைவருக்கும் எண்கள் இடவேண்டுமென்றால் 18ஸ்தான இலக்கம் இருந்தால் தான் முடியும். 18 இலக்கத்தை (DIGITS)-ஐ (6ஸ்தானம், 6ஸ்தானம், 6ஸ்தானம்) என்ற மூன்று பிரிவாக (666) Internal Revenue Service என்ற அமெரிக்க ஸ்தாபனம் அமுல்படுத்தியுள்ளது. இன்றைய வங்கி ATM கார்டுகள், Credit கார்டுகளைக் கவனியுங்கள்.

உலகின் மிக முக்கிய, பெரிய, 30க்கும் மேற்பட்ட ஸ்தாபனங்களின் ரகசிய CODE 666ஆக உள்ளது. ஆஸ்திரேலிய டைப்ரைட்டர்கள் 666 என்ற இலக்க சாவியோடு தயாரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் பிரபல சைக்கிள் கம்பெனியின் பூட்டுகள் கூட 666 இலக்கமிட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (தமிழ்நாட்டை சார்ந்தவர்கள் உங்கள் சைக்கிள் பூட்டின் சாவியிலும் 666 அச்சிடப்பட்டுள்ளதா என்பதை சோதித்து பார்க்கவும்)

தாய்லாந்தில் 13 இலக்க எண்ணும், மே. ஜெர்மனியில் 12 இலக்க எண்ணும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்வீடனிலும் அப்படியே. நாகலாந்தில் தொடங்கப்பட்ட NUMBERED ELECTION ID CARD முறை இப்போது இந்தியா முழுவதும் வந்து விட்டது.

INTERNET என்ற நவீன, உலகமெங்குமுள்ள கம்யூட்டர்களையும் ஒன்றிணைக்கும் NETWORKING முறை ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த NETWORK -க்குகள் WEBSITE களாக பிரிக்கப்பட்டு அட்டவனை (INDEX) செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு WEBSITE களும் www. xxx.com என்றே பெயரிடப்பட்டுள்ளன. WEBSITE -க்குள் நுழைய ஒவ்வொரு WEBSITE-லும் www. என்று அடித்தே ஆரம்பிக்கின்றனர். எபிரேயு மொழியில் W என்ற எழுத்து 6வது எழுத்தாகும். அதாவது www. என்றால் 666 என்று அர்த்தமாகின்றது.

வசனங்களும், தற்கால நிகழ்வுகளும் இயேசுவின் வருகையை நோக்கி நிறைவேறுகின்றன.

**சிந்திப்பீர்! செயல்படுவீர்!!**